விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 24 வெள்ளிக்கிழமை (06.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி. 109


# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண புதிய யோசனை முன்வைப்பு!

## பாதுகாப்பு செயலர் அறிவிப்பு



**இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை காண்பதற்காக வடபகுதி மக்களை தேசிய அரசியல் கட்சிகளூடாக அரசியலில் பிரவேசிக்கச் செய்ய வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் என்பன சர்வதேச சமூகத்திற்கு பொய்யான சித்திரம் ஒன்றை வடி வமைத்துக் காட்டுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் (24ஆம் பக்கம் பார்க்க)

## துமிந்தவுக்கு சத்திரசிகிச்சை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு அடுத்த வாரம் மற்றொரு சத்திரசிகிச்சை செய்யப்படவுள்ளது.

சிங்கப்பூரிலுள்ள எலிசபெத் வைத்திய சாலையில் இச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-11)

## இலங்கை தொடர்பிலான அறிக்கை அமெரிக்க செனற்றிடம் சமர்ப்பிப்பு

### விரைவில் விவாதம் நடைபெறும்

(வாஷிங்டன்)

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின், சர்வதேச போர்க்குற்ற விவகாரங்களுக்கான உயர்நிலை அதிகாரி ஸ்ரீபன்ரப்பின் இலங்கை தொடர்பிலான அறிக்கை, அமெரிக்க செனற் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

கடந்த சில நாட்களாக இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் புதிய அறிக்கை ஒன்று வெளிவரவுள்ளதென்ற செய்தி, ஊடகங்களில் வெளிவந்திருந்த நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை மதியம் செனற் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைச்சபையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை, இலங்கைக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்த நிலையில், தற்போது அமெரிக்க செனற்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய அறிக்கையானது, இலங்கைக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு பயணம் செய்து கள ஆய்வினை ஸ்ரீபன்.ரப் மேற்கொண்டிருந்தார்.

பங்களாதேஷில் 60 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற போர்க் குற்ற விவகாரங்களை தற்போது கையாண்டுவரும் ஸ்ரீபன் ரப்பின் இலங்கை தொடர்பிலான அறிக்கை, அரசுக்கு கடும்நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை தொடர்பில் ஸ்ரீபன் ரப்பால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் விரைவில் அமெரிக்க செனற் சபையில் விவாதம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)

## விசாரணையை வலியுறுத்தி டில்லியில் ஆர்ப்பாட்டம்


(புதுடில்லி)

டில்லியைத் மையமாக கொண்டு இயங்கிவரும் மனித உரிமைகளுக்கான சர்வதேச பாதுகாப்பு அமைப்பினர் இலங்கையின் போர்க் குற்றங்களை விசாரிக்க கோரிப் போராட்டமொன்றினை நேற்று வியாழக்கிழமை இந்தியத் தலைநகரான புதுடில்லியில் நடத்தியுள்ளனர்.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் நோக்கி பேரணியாக சென்ற இப் போராட்டத்தில் பல மனித உரிமை ஆர்வலர்கள் பங்கெடுத்துள்ளனர். எனினும் இலங்கை தூதரகம் நோக்கி பேரணி சென்ற நிலையில் டில்லி பொலிஸாரால் பேரணி இடையில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் திட்டத்தை அறிந்திருந்தாராம் பிரபாகரன்!

(கொழும்பு)



திருகோணமலையில் தமது தளமொன்றை நிறுவுவதற்காக யுத்தத்தை நீடிக்கவும் தீவிரப்படுத்துவதற்குமான அமெரிக்காவின் முயற்சி குறித்து இந்திய சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எச்சரித்திருந்தாக மின்சக்தி வலு சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

பிலியந்தலையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் சம்பிக்க ரணவக்க, 23.03.1986-ம் திகதி இந்தியாவின் த வீக் சஞ்சிகையில் வெளியான பிரபாகரனின் செவ்வியின் ஒரு பகுதியை வாசித்துக் காட்டினார். (23ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டமைப்பினர் ஆயுதம் ஏந்தியவர்கள்

## அமைச்சர் டக்ளஸின் உரையால் சபையில் கடும் வாய்த்தர்க்கம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சகலரும் ஆயுதம் தரித்தவர்கள் என்று கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சகலரும் ஆயுதம் தரித்தவர்கள் என்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புதமிழ்தேர்தல்கூட்டமைப்பு என்றும் தமிழ்த் தேசிய இராணுவம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட்டமைப்பு எம்பிக்களைப் பார்த்து கூறினார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், அரியநேத்திரன் உள்ளிட்ட எம்.பிக்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் மூண்டது. ஜெனிவா விவகாரம் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான 2ஆம் நாள் விவாதம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வரும் இந்தியக் குழுவில் சில கட்சிகளுக்கு அனுமதியில்லை

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

இலங்கைக்கு எதிர்வரும் 16-ம் திகதி விஜயம் செய்யவுள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கையில், 25-ம் திகதி வரை தங்கியிருந்து நிலைமைகளை நேரில் அவதானிக்கவுள்ளனர்.

இவர்கள் தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்யவுள்ளனர்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் தமிழகத்தின் பெரும்பாலான கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை மத்திய அரசு இணைத்துக் கொள்ளவில்லை. ஆயினும் இக் குழுவில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, (23ஆம் பக்கம் பார்க்க)

## தவறுகளை திருத்திக் கொண்டால் அழுத்தங்களைக் குறைக்கலாம்

### - கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை



(கொழும்பு)

இலங்கையில் நிலையான இன ஐக்கியத்தை ஏற்படுத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் போதுமானதல்ல. மாறாக அதற்கு அப்பால் சென்று செயற்பட வேண்டும். அதுமட்டுமன்றி, செய்த குற்றங்களை ஏற்றுக் கொண்டு அதற்காக மன்னிப்பை பெற்றுக்கொள்வதே சிறந்தது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எமது தவறுகளை திருத்திக் கொண்டால் சர்வதேச நாடுகள் ஒரு போதும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ சுட்டிக்காட்டவோ போவதில்லை. வரலாற்றில் தவறு செய்துள்ளோம்.எனவே அதனை இலங்கை ஏற்றுக் கொண்டு பாதிக்கப்பட்ட சமூகத்தை அரவணைக்க வேண்டும். அவ்வாறு அல்லாது (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 11 மணியளவில் உடுவில் பெண்கள் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் கிழக்கினைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாரான கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா (வயது-56) என்பவரே காயமடைந்தவராவார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள்களை சுன்னாகம் பொலிஸாரினால் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இவ் விபத்துக்கு கவனயீனமே காரணம் என சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

## திருக்கல்யாண மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு ஸ்ரீசெல்லக்கதிர்காம ஸ்வாமி திருக்கோவில் திருக்கல்யாண மஹோற்சவம் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் காயம்

மின்சாரம் தாக்கி படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர்யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில்அதிதீவிர சிகிச்சைப்பிரிவில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் வடமேற்குப் பகுதியை சேர்ந்த பருத்தித்துறைஆதுரவைத்தியசாலை ஊழியரானகே.உதய குமார் (வயது-48) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

ஓலை வெட்டுவதற்காக தென்னையில் ஏறியபோது மின்சாரம் தாக்கியதில் தென்னையில் இருந்து தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த அவர்பருத்தித்துறை ஆதுர வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

பின் மேலதிக சிகிச்சைக்காக இரவு 8.25 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (எ-11,24)




## நல்லூர் லயன்ஸ் கழகத்தின் லியோக் கழகங்களின் நிதி திரட்டலுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டுக் குலுக்கல்

10.11.2011 இல் நடாத்தப்படவிருந்து பிற்போடப்பட்ட குலுக்கல் 04.04.2012 இல் நடைபெற்றது.

இதில் பரிசு பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:-

1வது பரிசு - இல. 2756
2வது பரிசு - இல. 2600
3வது பரிசு - இல. 3779

ஆறுதல் பரிசுகள் - இலக்கங்கள் 3723, 4664, 2515, 3155, 4190 மேற்படி பரிசில்களுக்கான உரிய ரிக்கற்றுக்களை சமர்ப்பித்து 22.04.2012இற்கு முன்னர் யாழ்ப்பாணம் இல.200, சிவன் பண்ணைவீதியில் அமைந்துள்ள IIS சிற்றிக் கம்பஸ்ஸில் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0777271225
லயன் E.S.P. நாகரட்ணம் PMJF.
தலைவர் லயன்ஸ் கழகம், நல்லூர். (8116)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

March 2012 to August 2012

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்[illegible] முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiims[illegible], www.iimat[illegible], www.aicomas.org
Tel: 067 2222917, [illegible]4749, 067 3679688, 071 803 4848

விண்ண[illegible] 10.04.2012 (8107)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவக்கொழுந்து சதானந்தா



கச்சாய் வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 457, தபாற்கட்டைச்சந்தி, கண்டி வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சதானந்தா அவர்கள் 05.04.2012 நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (சின்னப்பர்) தம்பதிகளின் அன்பு மகளும் காலம் சென்ற நாகலிங்கம் சதானந்தா அவர்களின் அன்பு மனைவியும் காலம் சென்ற நாகலிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் திருமதி மகேஸ்வரி நடராஜா அவர்களின் அன்புச் சகோதரியும் கிருபானந்தா (அவுஸ்திரேலியா), நந்தினி (சுவிட்சர்லாந்து), தர்மினி (ஜேர்மனி), கிரிஷாணி (பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு தாயாரும் தியாகேந்திரன் (சுவிட்சர்லாந்து, ஸ்தாபகர் தியாகி அறக்கொடை நிறுவனம்), சுப்பிரமணியம் (ஜேர்மனி), திருமதி சோபனா (அவுஸ்திரேலியா), கமலநாதன் (பணிப்பாளர், தியாகி அறக்கொடை நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமியும் தாட்சாயினி, நிலாஜினி, அர்ஜீனா, பாலாஜி, ஐஸ்வர்யா, அருண், ஆருதி, மாதினி, மாலவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 07.04.2012 நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு இலக்கம் 457, தபாற்கட்டைச் சந்தி, கண்டி வீதி, அரியாலையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சிந்துபாத்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

457, தபாற்கட்டைச் சந்தி,
கண்டி வீதி, அரியாலை.

தகவல்: செ. கமலநாதன் (மருமகன்)
தொடர்பு : 021 222 1903
(8118)

## ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிமையம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## Media Resources and Training Centre, University of Jaffna

### விசேடமீள் பரீட்சைகள் (பழைய பாடத்திட்டம்)

### இதழியல் டிப்ளோமா கற்கைநெறி (முழுநேரம், பகுதிநேரம்)

இதழியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம் அணி III (2008/2009), பகுதி நேரம் அணி II (2008/2010) கல்வியாண்டு மாணவர்களுக்கான விசேட மீள் பரீட்சை எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பணிப்பாளர் / ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (சி-6277)

விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 15.04.2012 -பதிவாளர்




EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி அலுக்கைச் சந்தியிலிருந்து அம்பனைக்கு போகும் றோட்டில் (அளவெட்டி மத்தி) 5 1/4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 4949234
(8113)

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக கலந்துரையாடல்

மேற்படி கலந்துரையாடல் ஆனது எதிர் வரும் 08.04.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் கழக மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம். கழக ஸ்தாபகர் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்வதனால் அனைத்து பழைய மாணவர்களையும் கழகத்துடன் தொடர்புடையவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
தலைவர்/ செயலாளர்
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி.
(8107)

# இன்று ஒரு தகவல்

## உண்மையும் நேர்மையும்

பிரபஞ்சனன் என்றொரு ராஜா இருந்தார். சரஸ்வதி நதிக்கரையிலே இருந்த ஒரு நாட்டுக்கு அவன் அரசன். ஒருநாள் அவன் காட்டுக்கு வேட்டையாடப் போனான்.

காட்டிலே ஒரு பெண் மான் தன்னுடைய குட்டிக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தது. இவன் அதை உற்று நோக்கினான். அம்பையெடுத்து அங்கே தொடுத்தான். அந்த அம்பு போய் மானை குத்தியது.

உடனே அது ஒரு சாபமிட்டது.

"அம்பு வீசிய அரசன் புலியாக மாறக்கடவது" என்றது. அந்தச் சாபமும் உடனே பலித்தது. அரசன் புலியாக மாறினான். உடலெங்கும் கோடு கோடாக மாறிவிட்டது. பின்னால் வால் உண்டாகிற்று. உடனே அந்த மானைப்பார்த்து;

''நான் செய்த குற்றத்தை மறந்து மன்னிக்க வேண்டும்'' என்று வேண்டியது.

''நீ நூறு வருடம் புலியாக இருந்து எனது சாபத்தை அனுபவிக்க வேண்டும். அதன்பின் 'நந்தா' என்ற ஒரு பசு மூலமாக உனக்கு சாப விமோச்னம் ஏற்படும்'' என்று கூறி, விட்டு தனது உயிரை மாய்த்துக் கொண்டது.

புலியாக மாறிய ராஜா வாலை ஆட்டிக்கொண்டு காட்டுக்குள்ளே ஓடிப் போனார்.

நூறு வ்ருடங்கள் உருண்டோடின. அதன்பின் ஒருநாள் அந்தக் காட்டுக்கு அதிகளவான பசு மாடுகள் மேயவந்தன. காலையிலே வரும் மாடுகள் அனைத்தும் சாயந்தரம் வரைக்கும் மேய்ந்து விட்டு ஊருக்குத் திரும்பி விடும்.

ஒரேயொரு பசுமாடு மட்டுமே அங்கே தங்கிக் கொள்வது வழமையாக இருந்தது. இதை மற்றைய மாடுகள் எல்லாம் கவனித்தது.

அந்தநேரம் பார்த்து ஒரு புலி தன்னுடைய குட்டிகளுக்கு இரை தேடிக்கொண்டு வந்தது. இந்த பசுமாட்டைப் பார்த்ததும் பாய்வதற்கு ஆயத்தமாகியது.

அவ்வேளையிலே அந்தப் பசு தன்னுடைய உயிரை மாய்த்துக் கொள்வதில் கவலைப்படவில்லை. கோகுலத்திலே தனது கன்றுக்குட்டிகள் தனித்துவிடப் போகிறதே; அதனுடைய மனம் கஷ்டப்படப் போகிறதே என்று நினைத்தது. உடனே அந்தப் புலியைப் பார்த்தது.

''ஐயா கோகுலத்திலே என்னுடைய கன்றுக்குட்டிகள் பசியோடு காத்திருக்கும். அதற்கு பால் கொடுப்பதற்காகத்தான் வேகமாக செல்கிறேன். நான் போய் பால் கொடுத்துவிட்டு, அவைகளுக்கு புத்திமதி கூறிவிட்டு, கன்றுக்குட்டிகளை மற்றைய பசுக்களிடம் ஒப்படைத்துவிட்டு வருகிறேன். அதை கடைசியாகப் பார்க்க ஆசைப்படுகிறேன். நீங்கள் அனுமதி வழங்கினால், நான் போய் வருகிறேன்'' என்று கேட்டது.

''நீ சொல்வதை நான் எப்படி நம்பமுடியும்? உன்னை இப்போது அனுப்பினால், நீ திரும்பி வருவாய் என்பது என்ன நிச்சயம்?'' இன்றைக்கு நீ எனக்கு இரையாக வேண்டுமென்பதுதான் விதி என்று கூறிக் கொண்டு அப்படியே புலி போனது.

"நான் வார்த்தை தவறமாட்டேன். சொன்ன சொல் தவறினால் என்ன பாவங்களை அனுபவிக்க நேரிடும் என்பது எனக்குத் தெரியும். என்னை நம்பு" என்றது பசு.

புலியின் மனம் இளகியது. "சரி... உன்னை நம்புகிறேன். நீ போய் வா. ஆனால், ஒரு விடயம். உயிர் தப்புவதற்காக பொய் சொல்லலாம். அது பிழையில்லை. உனக்கு சில பேர் உபதேசம் செய்திருக்கலாம். அதைக்கேட்டு நீ ஏமாந்து விட வேண்டாம். வாக்குக்கொடுத்த பிரகாரம் இங்கே வந்து சேரவேண்டும்" என்றது புலி.

'சரி' என்று கூறிவிட்டு அந்தப் பசு வேகமாக ஊருக்குள் பறந்தது. கன்றுக்குட்டி பார்த்தது. பால் கொடுத்தது. அதன்பின் விபரத்தை சொல்லி விட்டது.

அதைக்கேட்ட கன்றுக்குட்டி சொன்னது: ''அப்படியென்றால் நானும் உன்னோடு வந்து அந்தப்புலிக்கு இரையாகி விடுவேன்'' என்றது.

அப்படியெல்லாம் செய்யக்கூடாது என்று சொல்லி விட்டு அந்தப்பசு கன்றுக்குட்டியை மற்றைய பசுக்கூட்டத்துடன் ஒப்படைத்து விட்டு தனது பயணத்தை ஆரம்பித்தது.

"பொய் சொல்லி உயிரைக் காப்பாற்றினால் அது உண்மைக்குச் சமம். உயிருக்கு அழிவை ஏற்படுத்தும் உண்மை பொய்க்கு சமம்.

"மற்றவர்களை காப்பாற்றுவகற்காக வேண்டுமென்றால் பொய் சொல்லலாம். என் உயிரைக் காப்பாற்றுவதற்காக நான் பொய் சொல்ல மாட்டேன் " என்று சொல்லிவிட்டு அந்தப்பசு உடனே வேகமாக அந்தப் புலியிடம் போய் முன்னால் நின்றது.

இதற்கு முன்னர் இதனோடு கன்றுக்குட்டி அங்கே போய் நின்று கொண்டது. "என் தாயோடு சேர்த்து என்னையும் உனக்கு இரையாக்கிக் கொள்'' என்று கேட்டுக் கொண்டது. இப்போது தான் அந்தப்புலிக்கு தன்னுடைய குட்டிகளைப் பற்றிய நினைவு வந்தது.

''நான் இறந்துவிட்டால் என் குட்டிகள் என்ன பாடுபடும்? அதே நிலைமை தானே இதற்கும் ஏற்படும் " என்று தனது மனதினுள் நினைத்துப் பார்த்தது.

''அதனுடைய மனதை மாற்றிக் கொண்டது. வாய்மை ஜெயித்தது. சத்தியம் காப்பாற்றியது. அந்தப் புலி அந்த பசுவிடமே... நீ எனக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்றது.

''எல்லா உயிர்களுக்கும் எவன் அபயம் வழங்கிறானோ அவன் பிரம்மத்தை அடைகிறான் " என்று பசு சொன்னது. அப்போது அந்தப் பசுதான் 'நந்தா ' என்று புலிக்குத் தெரிந்தது. உடனே அதைத் தொட்டுக் கும்பிட்டது.

உடனே புலி உருவம் மாறி ராஜா உருவம் வந்தது.

இதிலிருந்து நாம் அறிய வேண்டியது என்னவென்றால், உண்மையில் நேர்மை கலந்திருக்க வேண்டும் என்பது. இந்தக் காலத்திலே சில பேர் இதை பிழையாக புரிந்து கொள்வது உண்டு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ்ச்சங்கம் பாடசாலைகளுக்கு இடையே போட்டி நடத்த முடிவு

(மல்லாவி)

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தினால் அகிலஇலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன்காண் போட்டி எதிர்வரும் மே மாதம் 5,6 மற்றும் 12,13 ஆம் திகதிகளிலும் மாவட்ட ரீதியிலான போட்டிகள் நடைபெறும்.

எதிர்வரும் யூன் மாதம் 2ஆம் திகதி தேசிய மட்ட போட்டிகள் இடம் பெறவுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்க தலைவி துசாந்திக்கா குமாரசூரியர் தெரிவித் துள்ளார்.

எழுத்தாக்க போட்டிகளில் கட்டுரை, சிறுகதை,கவிதை என்பன வும் திறந்த போட்டிகளில் விவாதம், நாடகம் என்பனவும் நடைபெறவு ள்ளது.

இப்போட்டிகளில் பங்கேற்கும் பாடசாலை மாணவர்கள் 01.01. 1993 இற்கு பின்னர் பிறந்தவர்க ளாக இருத்தல் வேண்டும்.

போட்டி தொடர்பான விளக்கத்தினை பாடசாலைகளுக்கு அனுப் பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தினை பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும் . எனவும் சுற்று நிருபம் கடை க்காத பாடசாலை களில் மேலதிக விபரம் தேவைப்ப டுவோர் தலை வர் 077519 6365, செயலாளர் 0779 152282 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் விப ரங்களை பெற முடியும் என அவர் கேட்டுள்ளார்.

போட்டிகள் யாவும் மாவட்ட ரீதியிலும் தேசிய மட்ட ரீதியிலும் நடைபெறும்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-3-15)

# உடனடித் தேவைகளை எழுத்து மூலம் தாருங்கள்

## பிரி.எம்.பி.யாழ். போ.வைத்தியசாலையினரிடம் கோரிக்கை

இலங்கையிலுள்ள ஏனைய போதனா வைத்தியசாலைகளினைப் போன்று யாழ். போதனா வைத்தியசாலையினையும் சகல வசதிகள் கொண்ட ஏழு வைத்தியசாலையாக மாற்றியமைப்பதற்கு உதவி புரியுமாறு யாழ். வந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரிடம் வேண்டு கோள் விடப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ். ரவிராஜ் தெரிவித்தார். யாழ். வந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ சேவையில் வடக்கில் பெரும் பணியாற்றி வருகின்ற யாழ். போதனா வைத்தியசா லைக்கு சென்ற போதே மேற்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இவ் வேண்டுகோளிற்கு இணங்க இருதய கூற்று சிகிச்சைப் பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலையில் உடனடித் தேவையாக காணப்படுதனால் அதற்கான வேண்டுகோளினை எழுத்து மூலம் குறிப்பிட்டு தருமாறும் இது தொடர்பாக பிரிட்டன் பாராளுமன்றில் தெரிவித்த சாதகமான பதிலினை பெற்றுத் தருவதாகவும் யாழ். வந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் த லோர்ட் நெஸபி தெரிவித்துள்ளார்.

இவற்றினைவிட கடந்த 30 வருட காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் ஏனைய போதனா வைத்தியசா லைகளினை போன்று அபிவிருத்திப் பணிகள் இடம் பெறவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருதய சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து 30 வீதமான நோயாளர்கள் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் அல்லது கொண்டு செல்லப்படுபவர்களில் வறியவர்கள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. விபத்துப் பிரிவு, நரம்பியல் பிரிவு, முகமாற்று அறுவைச் சிகிச்சை, சிறுநீர்பிரிவு போன்ற மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் இல்லாமை பற்றியும் விளக்கமளிக்கப்பட்டதாக அவர் மேலும் தெவிரித்தார். (அ-2-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 35-40 | 40 | 30 |
| தக்காளி | 20-25 | 20 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 10 | 20 |
| கரட் | 40 | 30 | 30 |
| பூசணி | 30-35 | 20 | 20 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 30-35 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 50-90 | 70 |
| பெரிய வெங்காயம் | 85 | 80 | 70 |
| பாகற்காய் | 90 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 40-45 | 40 | 45 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | 20 | 20 | 25 |
| கறிமிளகாய் | 60 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300-400 |
| போஞ்சி | 40 | 40 | 70 |
| கத்தரிதம்புள்ள | -- | 20 | 10 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 25 | 30 |

# இராசி பலன்

*06.04.2012*
*(பங்குனி 24, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு*
*பூரணை பின்னிரவு 1.45 மணிவரை*
*அத்தம் பின்னிரவு 1.36 மணிவரை*
*இராகுகாலம் 10.38-12.08 மணிவரை*
*சுபநேரம் 6.08-7.38 மணிவரை*
*பெரிய வெள்ளி, பூரணை விரதம்.*
*அமிர்த சித்தம்.*

**மேடம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்,புதிய தகவல்கள் வந்து சேரலாம்,நல்லவர்களின் ஆதரவும் அறிவுரையும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றியளிக்கும்.

**இடபம்** அருமையான நாள்,பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள்,அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

**மிதுனம்** பொதுக்காரியங்களில் நாட்டம் செல்லும்,தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கடகம்** கனிவான பேச்சுக்களால் காரியங்களை சாதிப்பீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும்,வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சகோதர ஒற்றுமை பலப்படும்.

**சிங்கம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்,குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், விரதம், வழிபாடுகளில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கன்னி** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், வேலைச்சுமை அதிகரிக்கும், தொழில் கூட்டாளிகளிடம் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை, மனச் சஞ்சலங்கள் கூடும்.

**விருச்சிகம்** குடும்ப ஒற்றுமை மேலோங்கும் நாள், மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் அதிகரிக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்கும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** அரை குறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடரும் சிந்தனை தோன்றும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், அந்நியர் உதவிகள் கிடைக்கலாம்.

**மகரம்** ஏட்டிக்கு போட்டியாக இருந்தவர்கள் இனி மனம் மாறுவர், சொத்துக்கள் தொடர்பில் நன்மையுண்டு, ஆரோக்கியம் சீராகும், வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள்.

**கும்பம்** துயரங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்,குடும்பத்தில் கோபத்தைக் குறைப்பதன் மூலம் மன அமைதி கிடைக்கும், வேலைச் சுமை கூடும், கௌரவக்குறைவான நாள்.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்,உறவினர் வருகையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

வளவன்

# வி.கழகங்களுக்கு இடையிலான குழுப்போட்டியில் வெற்றிபெற்றோர்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச விளையாட்டு கழகங்களுக்கிடையிலான குழுநிலைப்போட்டிகளில் ஆண்களுக்கான கிரிக்கெற் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

அத்தோடு பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் சாவகச்சேரி இந்து அணியும் ஆண்களுக்கான கபடிப்போட்டியில் சாவகச்சேரி இந்து அணியும் வலைப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டு கழக அணியும் வெற்றிபெற்றுள்ளன.

மற்றும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணி ஆகியன வெற்றி பெற்று பிரதேச சம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொண்டன.

மேற்படி போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானம், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு கழக மைதானம் ஆகிய மைதானங்களில் நடைபெற்றது.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி மின்னொளியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# கால்நடை வளர்ப்புக்கு கடன் உதவி வழங்கல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கி அம்பன் கிராமத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கால்நடைகள் வளர்ப்பிற்கான கடன் வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க இருப்பதாக பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ். தர்மராஜா தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்ட நடவடிக்கையாக இக் கிராமத்தில் 25 பயனாளிகளுக்கு கடன் வழங்கப்படவுள்ளது.

மேலும் இந்த வங்கி மீளக்குடியேறிய வடமராட்சி கிழக்கு மக்களுக்கு கடன் வழங்கும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-10)

# சமுர்த்திப் பயனாளிகளின் புத்தாண்டுச் சந்தை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி பயனாளிகளுக்கு வழ்ங்கப்பட்ட உற்பத்தி பொருட்களினால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் புத்தாண்டுச்சந்தை எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தியாளர்களின் திவிநெகும விற்பனை சந்தை திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள இச்சந்தையில் விவசாயத்திணைக்களம், கூட்டுறவு திணைக்களம் ஆகியவற்றின் பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ்விரு நாட்களிலும் பிரதேச சமுர்த்தி சமூக மன்றங்களின் சிறுவர் பிரிவுகளினால் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

சமுர்த்தி அதிகார அமைப்பின் அனுசரணையுடன் பிரதேச சமுர்த்தி வங்கிகள் ஊடாக சமுர்த்தியாளர்களின் வாழ்வாதரத்தை அதிகரிக்கும் நோக்குடன் பல்வேறு உதவிப் பொருடகள் மானிய அடிப்படையில் கடனாக வழங்கப்பட்டிருந்தது. இவ் உதவிப் பொருட்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களே மேற்படி சந்தையில் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# கரப்பந்தாட்டப்போட்டியில் பருத்தித்துறை மாதனை சம்பியன்



(கரவெட்டி)

மின்னொளியில் நடைபெற்ற கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் இமையாணன் மத்திய ஏ அணியைத் தோற்கடித்து பருத்தித்துறை மாதனை அணி சம்பியனானது.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய 36 அணிகளுக்கிடையிலான 5 பேர் கொண்ட (ஓவர் கேம்) போட்டி நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு மின்னொளியில் இடம்பெற்றது. இதில் முதல் அரையிறுதி ஆட்டத்தில் இமையாணன் மத்திய ஏ அணி கரணவாய் சந்திரோ அணியைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கும் இமையாணன் மத்திய பி அணியை தோற்கடித்து பருத்தித்துறை மாதனை அணி இறுதிப் போட்டிக்கும் தெரிவாகியது.

பரபரப்பான இறுதி ஆட்டத்தில் இமையாணன் மத்திய ஏ அணியை 2- 1 என்ற செற் கணக்கில் தோற்கடித்து பருத்தித்துறை மாதனை அணி சம்பியனானது. (அ-3-24)

# கோபுரமணி ஏற்றி அடித்தல்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் இராஜகோபுரத்திற்கு தெற்கு பக்கமாக அமைந்துள்ள மணிக்கோபுரத்தில் மணி ஏற்றி அடிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன்,நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதீ, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர்ப்பிரதேசம், தீவகப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)




# கிரிக்கெட்போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரிக்கும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் இடையிலான சிநேக பூர்வமான 50 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இரு பாடசாலைகளுக்கு இடையிலான தொடர்பை வலுப்படுத்துவதற்கான இப் போட்டியில் 15 வயதுப்பிரிவு அணியினர் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

# சைவத்திருமுறை விழா

சங்கானை கல்விக்கோட்டத்தின் சைவ திருமுறை விழாவும் சைவநெறித்தொண்டு படுசெயல் நிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யா/அராலி இந்துக் கல்லூரியில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் து. எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் நல்லை திருஞான சம்பந்த ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசியையும் வாழ்த்துரைகளை வலிகாம வலயக் கல்வி பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன், வலி.மேற்கு பிரதேச சபை செயலர் அ.சோதிநாதன் ஆகியோரும் சிறப்புரையினை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்தவுள்ளனர். (அ)

# பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சிப்பாடலுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி உலாவருதலும் இடம்பெறும். (அ)







யா/ மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை விளையாட்டு பொறுப்பாசிரியர் செல்வி ஜெயகாந்தினி ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் அவரது பாரியார் திருமதி சத்தியசீலன் ஆகியோர் இணைந்து வெற்றியீட்டிய இல்லத்திற்கான கேடயத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி கோவில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

நீர்வை அருள்மிகு ஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி திருக்கோவிலின் மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர் நீர்வைக் கதிர்வேல் என்ற பெயர் தாங்கி மலர்ந்துள்ளது. கடந்த 25 ஆம் திகதி திருக்குடமுழுக்கு பெருவிழா இடம்பெற்ற நாளிலேயே 126 பக்கங்களுடன் சிறப்பு மலர் வெளியிடப்பட்டிருக்கின்றமையை பாராட்டியே ஆக வேண்டும்.

ஆசிச்செய்திகள் பதிவியல், முருகியல், பொதுவியல் என நான்கு பகுதிகளாக மலரின் உள்ளடக்கங்கள் அமைந்துள்ளன.

கருவறையில் வேலை வைத்து வழிபடுவது ஈழத்திற்கு தனித்துவமான மரபு நல்லூர், சந்நிதி என நீளும் வரிசையில் நீர்வை செல்லக்கதிர்காமத்திலும் வேற் பெருமானே கருவறையில் வீற்றிருக்கிறார். அவரது எழிற்கோலத்தை ஓவியமாக வரைந்து பிரசுரித்துள்ளனர். மூலவரை புகைப்படம் எடுக்க கூடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சித்திரமாக வரைந்து பிரசுரித்துள்ளமையை பாராட்ட வேண்டும்.




ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் நீர்வை மணி என்ற பெயரால் சைவ உலகினரால் அறியப்பட்டவர். கருவறையில் ஒரு வேளை மாத்திரம் தீபமேற்றும் ஆலயமாக இருந்த இக்கோவிலில் பரிவார மூர்த்தங்களை அமைத்து அழகொளிரும் ஆலயமாக வளர வழிகாட்டிய பெருந்தகை. அவரது எண்ணக் குவியல்கள் யாவும் கருணைக் கடவுள் என்ற தலைப்புடன் வழங்கப்பட்டுள்ளன.

கதிர்காம கந்தன் மீது நம்பிக்கை கொண்ட இரு தபஸ்வினியரால் அமைக்கப்பட்டு வழிபடப்பெற்ற சிறப்புடையது. இவ்வாலயம் இத்தல இறைவனை வழிபடுபவர்கள் கதிர்காம யாத்திரை தரிசனத் திருப்தியை பெறுவர். என்பது பாரம்பரியமாக விளங்கும் நம்பிக்கை.

கும்பாபிஷேகத்தை மேற்கொண்ட பிரதம குரு சிவ ஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள் தனது ஆசிச் செய்தியில் இந் நம்பிக்கையை குறித்துக் காட்டியிருக்கிறார்.

இவ்வாலயம் ஒரு நூற்றாண்டு பழமை வாய்ந்தது என்ற செய்தி பதிப்பாசிரியர் தி. மயூரகிரியினால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆலய வரலாற்றை கவர்ச்சியான எழுத்து நடையில் வழங்கியுள்ளார். யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தால் நடத்தப்படும் டிப்ளோமா கற்கையில் கடந்த ஆண்டில் மெரிட் சித்தி பெற்றவர் இவர். இவரது எழுத்து நடை இதனை மெய்ப்பித்து நிற்கிறது.

பதிவியல், கோவில் பற்றிய வரலாற்று செய்திகளையும் ஆலயத்தின் மீது பிரம்ம ஸ்ரீ ந. வீரமணி ஐயர் பாடிய கீர்த்தனைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஆலய வரலாற்றில் முக்கிய இடம்பெறுகின்ற வியாபாரி ஐயா, நீர்வைமணி ஐயா ஆகியோருடைய படங்களும் திருப்பணி சபையாருடைய படமும் அடங்கியுள்ளன.

முருகியல், முருகன் பற்றிய ஆக்கங்களை கொண்டுள்ளது. இதில் பெரும்பாலும் இந்திய அறிஞர்களது ஆக்கங்கள் காணப்படுகின்றன. பொதுவியல் சமயம் சார்ந்த ஆக்கங்களை தாங்கியுள்ளது.

தமிழ் இந்து என்ற இணையத்தளம் சமயவாதிகளிடையே பிரபலமானது இந்த இணையத்தளத்தின் கட்டுரையாளர் குழுமத்தில் பதிப்பாசிரியர் தி.மயூரகிரி இடம்பெற்றிருப்பதாலோ என்னவோ அக்குழும எழுத்தாளர்கள் பலர் இம்மலருக்காக சிறப்பான ஆய்வுக்கட்டுரைகளை வரைந்துள்ளனர். முனைவர் கோ.ந.முத்துக்குமாரசுவாமி, ஜடாயு, சிதம்பரம் நடராஜா தீட்சிதர், சித்தாந்தரத்தினம், வெங்கடேசதீட்சிதர் போன்றோரது ஆக்கங்கள் மலருக்கு பெருமை சேர்க்கின்றன. ஈழத்தில் பெருமை பெற்ற சமயக் கட்டுரையார்களது ஆக்கங்களும் மலருக்கு கனதியை வழங்கியுள்ளன.

மொத்தத்தில் கும்பாபிஷேகம் இடம்பெறும் நாளில் அவசரமாக மலர்ந்தாலும் திருக்குடமுழுக்கு பெரு விழா சிறப்பு மலர் கொண்டிருக்க வேண்டிய அனைத்து அம்சங்களையும் அழகாக தாங்கி வெளிவந்திருக்கிறது. நீர்வைக்கதிர் வேல்

ச.லலீசன்
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

## வரி அதிகரிப்பு குறித்து வாகன இறக்குமதியாளர் சங்கம் விசனம்

வாகனங்கள் மீதான அதிகரித்த இறக்குமதித் தீர்வை மற்றும் வேறு நிபந்தனைகள் தொடர்பான தீர்மானத்தை அரசாங்கம் மாற்றாவிடின் தமக்கு இந்த வியாபாரத்தை கைவிடுவது தவிர வேறு வழியில்லை என மீளமைக்கப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வோர் கூறியுள்ளனர்.

வாகனங்கள் மீதான வரியை அதிகரித்தமையை விட அவற்றின் பாவனைக்கு காலம் குறைக்கப்பட்டமையே பெரிய பிரச்சினையாக உள்ளது. முன்னர் இரண்டு வருடங்கள் வரை பயன்படுத்தப்பட்ட கார்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

இப்போது ஒரு வருடம் அல்லது அதிலும் குறைந்த காலம் பயன்படுத்தப்பட்ட கார்களையே இறக்குமதி செய்ய முடியும்.

இதன் காரணமாக 120 சதவீத தீர்வை செலுத்திய கார்களுக்கு 200 சதவீத தீர்வையும் 51 சதவீத தீர்வையுடன் இறக்குமதியான முச்சக்கரவண்டிகளுக்கு 100 சதவீத தீர்வையும் செலுத்த வேண்டியுள்ளது.

கடந்த 2009 இல் 3 ஆயிரத்து 421 வாகனங்களும் 2010 இல் 37 ஆயிரத்து 134 வாகனங்களும் 2011 இல் 54 ஆயிரத்து 285 வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டதாக திறைசேரி அறிவித்துள்ளது.

முன்பு ஒரு குடும்பத்துக்கான காரின் விலை 1.2 மில்லியன் ரூபாவாக இருந்தது. இனிவரும் காலங்களில் அதுபோன்றதொரு கார் வாங்குவதற்கு 5 மில்லியன் ரூபா தேவைப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் யோகா பெரேரா தெரிவித்தார். (அ-2)

## கே.பியை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் -சம்பிக்க

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் தலைவர் ரத்ரகுமாரனை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் வாழும் தமிழீழ விடுதலைப்புலி தலைவர்கள் மீண்டும் இலங்கையில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானம் தொடர்பில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமூகங்களுக்கு இடையில் சமாதானத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் மேற்கொண்டு வரும் முனைப்புக்களை புலித் தலைவர்கள் சீர்குலைக்க முயற்சிக்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பயங்கரவாதிகள் சுதந்திரமாக நடமாடித் திரிவதாகவும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சம்பிக்க ரணவக்க கோரியுள்ளார். (அ-2)






வடமாகாண சபை அரச சார்பற்ற நிறுனவங்களால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் கலந்துரையாடுவதையும் ஜனாதிபதியின் விசேட செயலணியின் செயலாளர் திவாகரட்ண, வடமாகாண சபையின் பிரதம செயலர் திருமதி ஆர்.விஜயலட்சுமி ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட அரச அதிபர்கள், வடமாகாண சபையின் உயரதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# கணனியில் யுஸ்பி பொட்ஐ செயலிழக்கச் செய்தல்



யுஸ்வி பொட்ஐ அனைவருக்கும் பயன் உள்ளதாக இருந்தாலும் பள்ளி கல்லூரி மற்றும் அலுவலகம் போன்ற இடங்களில் USB இனை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டு இருக்கும். கணனியில் VIRUS ஆல் பாதிப்பு வந்து விடும் அல்லவா அதனால் USB PORT இனை DISABLE செய்யப்பட்டு இருக்கும். இதை எப்படி செய்யும் வழிமுறைகளை காண்போம். இதனை WINDOWS இல் DISABLE செய்வது பற்றி பார்ப்போம். REGISTRY EDITOR செல்ல வேண்டும். அதற்கு RUN..........> TYPE Regedit REGISTRY EDITOR சென்றவுடன் HKEY LOCAL MACHINE\ SYSTEM\ Current Controlset\ Services\ UsbStor மேலே உள்ள PATH க்கு சென்று பின் START என்பதை இரண்டு முறை கிளிக் செய்ய வேண்டும். அடுத்து ஒரு விண்டோ ஒன்று திறக்கும். அதில் HEXDECMIAL VALUE ஐ SELECT செய்து VALUE DATA என்ற இடத்தில் 4 என்ற மாற்ற வேண்டும். பின் OK கொடுத்து கணனியை RESTART செய்ய வேண்டும். இதில் கவனிக்க வேண்டியவை 4 என்று மற்றும் முன் அதில் உள்ள எண்ணை (3) நினைவில் கொள்ள வேண்டும். அதுதான். ENABLE செய்ய வேண்டிய எண்.

### புதுவகை மடிக்கணனி -Asus

Graphics processing Unit கொண்ட லப்டொப்புகள் விற்பனையில் கொடி கட்டி பறக்கின்றன. அதனால் இப்போது நிறைய நிறுவனங்கள் இந்த வகையான Tablet மற்றும் லப்டொப்புக்களை தயாரிப்பதில் மிகத் தீவிரமாக இருக்கின்றனர். ஆனால் அப்படிப்பட்ட டிவைஸ்களுக்கு மிகவும் சக்தி வாய்ந்த Softwares தேவைப்படும்.

மிகவும் சக்தி வாய்ந்த டிவைஸ்களைப் பார்த்தால் Asus ஐ மறக்க முடியாது. ஏனெனில் Asus Transformer Prime ஒரு மிகவும் சக்தி வாய்ந்த டேப் லெட் ஆகும். இந்த டேப்லெட் நடுத்தர மற்றும் உயர் தர கேம்களை support செய்கிறது. தற்போது கேமிங் வசதியை முழுமையாக சப்போர்ட் செய்யும் புதிய நோட்புக்கைத் தயாரிக்க இருக்கின்றது Asus. அந்த நோட்புக்கில் மைக்ரோசொப்டின் connect motion sensing controller என்ற தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த இருக்கின்றது.

குறிப்பாக புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதில் Asus பல முறை வெற்றி பெற்றிருக்கிறது. குறிப்பாக லப்டொப்பில் என் விடியாவின் 3D vision sensor பயன்படுத்துவது ஒரு கடினமான காரியம் ஆகும். ஆனால் அதை தனது நோட்புக் பேசிலில் மிக எளிதாகப் பயன்படுத்தியது.

ஆகவே இப்போது Asus connect தொழில் நுட்பத்தை தனது நோட்புக்கில் பயன்படுத்த இருக்கிறது. குறிப்பாக தனது பேசில் நோட்புக்கில் உள்ள கண்ட்ரோலரில் உள்ள கமரா மற்றும் சென்சார்களை அகற்றி விட்டு இந்தப் புதிய தொழில் நுட்பத்தை இணைக்க இருக்கின்றது. எனவே வரும் புதிய லப்டொப் நிறைய சென்சார்களோடு மிகவும் ஸ்டைலாக இருக்கும். மேலும் இந்த லப்டொப் விண்டோஸ் 8 இயங்கும் திறத்தில் இயங்கும். இந்த தொழில் நுட்பத்தின் மூலம் Asus இன் லப்டொப்பில் அருமையான கேம் விளையாடலாம்.

(தொடரும்)

## அழகான கூகுள் குரோம் தீமைப் புகைப்டத்தோடு பெற....




கூகுள் குரோம் உலாவியை அனைவரும் பயன்படுத்துவதற்கு அதன் எளிமை, வேகம் வசதிகள் தான் காரணம்.

கூகுள் குரோம் தோற்றத்தை அழகாக மாற்ற பல எண்ணற்ற தீம்கள் இருந்தாலும் உங்கள் புகைப்படத்துடன் கூடிய அழகான கூகுள் குரோம் தீமை உருவாக்கலாம்.

1. முதலில் இந்த லிங்கில் சென்று நீட்சியை தரவிறக்கம் செய்து நிறுவிக் கொள்ளவும்.

2. அடுத்து New tabகிளிக் செய்தால் My Chrome Theme என்ற புதிய வசதி வந்திருக்கும். அதை கிளிக் செய்யவும்.

3. ஒபன் ஆகும் விண்டோவில் START MAKING THEME என்ற பட்டனை கிளிக் செய்யவும்.

4. அடுத்து UPLOAD IMAGEஎன்பதை கிளிக் செய்து கணனியில் சேமித்து வைத்திருக்கும் உங்கள் புகைப்படத்தை தெரிவு செய்து கொள்ளுங்கள்.

5. அடுத்து ADJUST POSITION என்பதை கிளிக் செய்து உங்களுக்கு வேண்டிய மாற்றங்களை செய்து கொள்ளுங்கள்.

6. அடுத்து Continue Step 2 என்பதை கிளிக் செய்யவும். இந்த பகுதியில் உலவியின் நிறங்களை உங்களின் விருப்பம் போல தெரிவு செய்து கொள்ளுங்கள்.

7. நிறங்களை தெரிவு செய்தவுடன் மேலே உள்ள Continue to Step 3 என்பதை கிளிக் செய்யவும்.


8. இதில் கீழே உள்ள PREVIEW MODE கிளிக் செய்தால் உங்களுடைய தீம் எப்படி இருக்குமென் பார்த்துக் கொள்ளலாம்.

9. முடிவில் உங்கள் தீமுக்கு ஏதாவது ஒரு பெயர் கொடுத்து MAKE MY THEME என்ற பட்டனை அழுத்தவும்.

10. உங்கள் குரோம் தீம் உருவாகிவிடும். INSTALL MY THEME என்ற பட்டனை அழுத்தி உங்களுடைய தீமை நிறுவிக் கொள்ளுங்கள்.




## எம்எஸ் வேர்ட் ஒபீஸ் தரும் பிடி எவ் கோப்பமைவுக்கான ஆதாரம்




Adobe System என்ற நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட PDF(Portable Document Format இன்று பலரது வரவேற்பையும் பெற்ற கோப்பு வடிவமாக காணப்படுகின்றது.

இக்கோப்பு வடிவத்தில் எளிதில் மாற்றங்களை மற்றவர்கள் ஏற்படுத்த முடியாது என்பதே பலரும் இதை பயன்படுத்துவதற்கு காரணமாகும்.


ஏனைய கோப்புக்களை PDF கோப்புக்களாக மாற்றுவதற்கு பல்வேறு மென் பொருட்கள் காணப்பட்ட போதிலும் இலவசமாகவும் எளிதாகவும் PDF கோப்புக்களை உருவாக்கும் வசதியை MS-Word Office தருகின்றது.

கீழ்வரும் படிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் MS-Word Office இன் உதவியுடன் PDF கோப்புக்களை உருவாக்க முடியும்.

1. தரப்பட்டுள்ள இணைப்பிற்கு சென்று Save As PDF and XPS (http://www.microsoft.com/download/en/confirmation.asph?id=7) வசதியை ஏற்படுத்துவதற்கான மென்பொருளை தரவிறக்கம் செய்து நிறுவிக் கொள்ளவும்.


2. மென்பொருளை நிறுவிய பின் MS-Word Office ஐ ஒப்பன் செய்து Save As என்ற தெரிவினுள் செல்லும் போது PDF and XPS எனும் வசதி காணப்படும். இவ்வசதியை பயன்படுத்துவதன் மூலம் PDF கோப்புக்களை உருவாக்க முடியும்.

# அமைதியற்று கொந்தளிக்கும் நேரங்களில்



**ஆன்மீகம் 27**

ஒரு கொந்தளிப்பான நேரத்தில் தான் பகவத்கீதை வெளிவந்தது. நாம் இன்றும் அதனால் நன்மை அடைந்து கொண்டிருக்கிறோம் இல்லையா? போர்க்களத்தில், கிருஸ்ணர் அர்ச்சுணனுக்கு உபதேசிக்க ஆரம்பித்தார். அவர், எல்லாமே சரியாக நடந்து கொண்டிருந்தபோது, போதனை செய்யவில்லை. அர்ச்சுணனும் கேட்கத்தயார் நிலையில் இல்லை. ஏனெனில், அவன் கிருஸ்ணரைத் தன் நண்பனாக நினைத்தான். ஆனால், கொந்தளிப்பான நேரம் வந்தபோது அறிவும், ஞானமும் அவசியமாயிற்று. அப்போதுதான் அமைதியும், நிலைத்தன்மையும் தேவையாயிற்று. அந்த சூழ்நிலையை நன்கு புரிந்துகொண்டு அதற்கேற்ப புத்திசாலித்தனத்துடனும் செயற்படத் தெளிவான மனம் அவசியமாயிற்று; இந்த ஞானம், இந்த முழு கண்டத்திற்காகவும் (ஏன் முழு உலகத்துக்காகவுமே) வந்தது. நாம் இப்போதும் அதனால் பயன்பெற்று வருகிறோம்.



அமைதியற்று தவிக்கும் நேரங்களில் அதை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு நமக்கு எது தேவைப் படுகிறது என்று பார்ப்போம்.

முதலாவாது, நாம் இதைக் கொந்தளிப்பான நேரம் என்று உணர்ந்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அமைதியற்று கொந்தளிக்கும் நேரம் என்று ஒத்துக்கொள்ள வில்லையானால், நாம் கனவுலகில் இருக்கிறோம். நம்மால் தீர்வு காண முடியாதநிலையில் உள்ளோம். ஆகவே, முதலாவது புரிந்துகொள்ளுதல். இரண்டாவதா, ஏற்றுக்கொள்ளுதல். இது கொந்தளிப்பான நேரம், இது கெட்ட சூழ்நிலை என்று ஏற்றுக் கொள்ளும் அந்த நொடியில் நம் உணர்ச்சிகள் சாந்தமடைகின்றன. நாம், இது "ஏன்" இந்த அமைதியின்மை என்று கேட்கமாட்டோம். எது நடந்து கொண்டிருக்கிறதோ, அதைக் கேள்வி கேட்பதில் எந்தப்பயனுமில்லை. அது சவப் பரிசோதனை போன்றது, அது இந்தக்கணத்திற்குப் பயனற்றது.

ஆகவே, இது இப்படி இருக்கிறது என்று ஏற்றுக்கொள்வது மனதில் தெளிவைக் கொண்டுவருகிறது; அமைதியைக் கொண்டுவருகிறது. உணர்ச்சிகள் அடங்கும்போது, நீ நன்றாகச் சிந்திக்கமுடிகிறது. ஏனெனில், ஒரே சக்திதான், உணர்ச்சியாகவும், சிந்தனையாகவும் செயல்படுகிறது. கொந்தளிப்பான நேரத்தில் தடுமாற்றமடைந்து, நம் சக்தியை உணர்ச்சிகளின் வாயிலாக வீணடித்தால், நாம் அந்த நேரத்தை ஆக்கபூர்வமாகச் சிந்தித்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண உபயோகப்படுத்த இயலாது போகிறது. ஆகவே, ஏற்றுக்கொள்ளுதல் என்பது இரண்டாவது விடயம்.

நீ, அதை ஏற்றுக்கொண்டு விட்டால், அது செயலற்ற ஏற்றுக் கொள்ளல் ஆக இருக்க முடியாது. "நல்லது- நடக்கிறபடி நடக்கட்டும் கடவுளிடம் விட்டு விடுவோம். அவர் பார்த்துக் கொள்வார்" இந்த மாதிரியான ஏற்றுக்கொள்ளலால் பிரியோசனம் இல்லை. செயற்படுதல் அவசியம். உனக்கு மனதில் தெளிவும், கூர்மையும் அந்தத் தருணத்திற்கேற்ப செய்படும் திறனும், ஆக்க சக்தியும் தேவைப் படுகிறது. என்ன மாற்றங்களை ஏற்படுத்த நினைக்கிறாய்? அந்தச் சூழ்நிலையை எப்படி திறமையாக உபயோகப்படுத்திக்கொள்ள விரும்புகிறாய்?

பகவத் கீதையில், இதே சூழ்நிலையைத்தான் நாம் பார்க்கிறோம். முதலில், அர்ச்சுணன் அந்தச் சூழ்நிலையை ஏற்றுக்கொள்ளவில்லை. வாழ்வில் ஒருபோதும் அழுதறியாத அந்த மாவீரன் கிருஸ் ணனின் முன் நடுக்கத்துடன் தரையில் உட்கார்ந்து அழுதான். "இல்லை என்னால் முடியாது" என்றான். ஆனால், கிருஸ்ணர் "எழுந்திரு, இங்கே வா உன் இதயத்திலிருக்கும் இந்தப் பலவீனத் தைத் தூக்கியெறி, நீ சுமந்து கொண்டிருக்கும் இந்த உணர்ச்சிக் குப்பைகளை கீழே போடு. வா" என்றார். கிருஸ்ணர், அர்ச்சுணனின் தான் எனும் வீரத்தை (அகங்காரத்தை) தூண்டி விட்டார். இந்தச் சூழ்நிலை யைக்கையாளும் திறமை உன்னிடம் இருக்கிறது. எழுந்திரு- இங்கே வா- உன்னைப்பற்றி மக்கள் என்ன சொல்வார்கள்? வளரும் பருவத்தினரும், குழந்தைகளும் கீழே விழும்போது அழ ஆரம்பிக்கின்றனர். ஆனால், நீ அவர்களிடம் நீ பெரிய ஆள்- உனக்கு ஒன்றும் ஆகவில்லை என்று நம்பிக்கை கொடுக்கும் அந்த வினாடியில் அழுகை நின்கிறது. உள்ளுக்குள் பலம் வருகிறது. "ஓ... நீ எதற்கும் உதவாதவன்- உன்னால் எந்தப்பிரியோசனமும் இல்லை" என்று நீ சொல்லிக்கொண்டேருந்தால் அவர்களின் உள்திறமை, அந்த சக்தி வெளிப்படாமலே போய்விடும். எனவே, அவர்களின் சுயமதிப்பை ஊக்கிவித்தல் அவசியம்.

இன்று இந்தியாவில் தன்னம்பிக்கை குறைவாக இருக்கிறது. "இந்தப் பொருள் ஜப்பானில் அல்லது நீயூயோர்க்கில் அல்லது வேறெங்கோ செய்யப்பட்டது" ( அதை விட நன்றாகவே அப்பொருள் இந்தியாவிலும் செய்யப்பட்டாலும்) என்று

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

சொல்லிக்கொள்வதில் பெருமிதம் கொள்கிறார்கள். இங்கே அடிப்படையான சுயமதிப்புக்குறைவு இருக்கிறது. நீ யாராவது ஆக்கசக்தியுடன் இருக்கக் கூடாது என்று நினைத்தாயானால் அவரிடமிருந்து சுயமதிப்பை எடுத்துவிடு. அவன் (அல்லது அவள்) உபயோகமில்லாமல் ஆகிவிடுவார். தன்னம்பிக்கையும், சுயமதிப்பும் கொந்தளிப்பான நேரங்களில் உன்னுள் ஆக்க சக்தியைத் தூண்டும்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்

**27**


## சந்திர மேட்டிலுள்ள இரேகைக் குறிகளின் பலாபலன்கள்

...சந்திர ஆதிக்கருக்கு ஸ்தூலப் பிரபஞ்சத்தில் நாட்டங்கிடையாது. பொதுவாய் மனோராஜ்யத்தில் வெகுபிரீதி. எல்லா விவகாரங்களையும் கற்பித சித்திரக் காட்சிகளாக மனக்கண்ணால் காண்கின்றனர். இவர்களுக்குக் கற்பனை சக்தி அதிகம். மனக்கண்ணால் பதம் சப்தம் அர்த்தம் காட்டும். அடையாளங்கள் எல்லாம் கற்பிதமாக்கப்பட்டுப் பல்வேறு பாஷைகளிலும் ஒருவருக்கொருவர் அறியும்படி வருகின்றன. இக்கற்பிதம் எழுத்து மூலமாயும் வருணிக்கப்படுகின்றன. தந்தியில் அனுப்புங் கால் புள்ளிகளைக் கொண்டு சப்தம் சேர்க்கப் படுகின்றது. எழுத்துக்கள் பதமாய் சங்கல்பம் யாதெனக்காட்டுகின்றன. எழுத்துச் சேர்க்கையும் பதச்சேர்க்கையும் சேர்ந்தே மற்றவர்கள்

**சக்தி**

எண்ணம் யாதென உருவாக்கப் படுகின்றது. மனத்தில் சித்திரம் கற்பிதம் ஆகாவிடில், எழுத்தும் சப்தமும் உண்டாகா. எனவே, மனத்தில் சங்கல்பத்துக்குரிய சித்திரம் ஏற்பட்ட பிறகே கற்பனைக்கு மேம்பாடான சொல் அமைகிறது. வீடு என்று எழுதும்போது மனக்கண்ணாடியில் அச்சொல்லுக்குரிய பொருளான சித்திரம் இலட்சியார்த்தமாக அமைகிறது.

இவ்விதம் அபாரமான யோசனை சக்தியால் அனேக விடயங்கள் ஸ்தூலமாய் உருவாக்கப்படுகின்றன. மனோராஜ்யம் செய்வதில் மகா மேதாவியாய் விளங்குவதால் சப்த கிரகங்களில் ஒன்றான சந்திரனுக்கு இந்த விசேட ஆதிக்கமிருந்து வருகிறது வெளிப்படை. புதிய புதிய யுக்தியும் யோசனை கற்பிதங்களும், இவ்வாதிக்கருக்கு அபூர்வமாய் உண்டாகும். இந்தக் கற்பனா சக்தியால் இவர்கள் மிக்க இன்பத்தை அனுபவிக்கின்றவர்களாகின்றனர். சந்திராதிக்கமில்லாவிடத்து கற்பனா





## ரேகைகளும் கிரகங்களும்

சக்தியில்லையென்பதும், அதனால் சந்தோசமில்லை என்பதும் புலனாகும். சந்திராதிக்கம் அளவு கடந்தவிடத்து பிரமையதிகரித்து உன்மத்தனாகவோ அல்லது புத்திஸ்வாதீனமற்றவனாகவோ செய்துவிடும். எனவே, சந்திராதிக்கம் குறைந்தோ அல்லது மட்டுக்கு மிஞ்சியோ இல்லாமல் நடுத்தரமாயிருப்பது சிலாக்கியமாகும். பாஷைக்கான அக்ஷரங்கண்டு பிடிப்பவர், சங்கீத வித்வான், கவிவாணர் கதாசிரியர் முதலானவர்களிடத்தில் சந்திராதிக்கத்தைக் காணலாம். இவர்கள் தங்கள் சக்தியை மனக்கண்ணில் காண்கின்றனர். தங்களைச் சுற்றியிருப்போருக்கேற்றவாறு தாங்கள் நடந்து திருப்தியளிக்கின்றனர். சாதாரணமான கற்பனைச்சக்தியே காட்சிகளை வியர்பிக்கச் செய்கிறது. இந்தச் சக்தி குறைந்தோ, இல்லாமலோ இருந்தால்யாது பலனை அனுபவிக்கக் கூடும்? இருளோ- சூனியமோ- சூழ்ந்திருக்கும், இயற்கை வனப்புக்கள், பக்ஷிகள், புஷ்ப வகைகள் தோன்றியும் மனக்கண்ணாடியில் பிரதிபலித்து விருத்தியாகாவிடில், அதன் உண்மையை உணர்வதற்கில்லாது போய்விடுகிறது. கற்பனை அற்றால் அது வாழ்வில் சுருக்கத்தைக் குறிக்கும். கற்பனைக்கான சங்கல்ப்பமெல்லாம் சித்தியாகும் என்பதன்று. என்றாலும், கற்பனை வாழ்க்கை நடவாது. இந்தக் கற்பனா சக்தி சந்திரனுக்குரியாதாகும்.

(தொடரும்)

# மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறை கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது

## அரசியல் தலையீடு காரணமாம்

(கொழும்பு)

அரசியல் தலையீடு காரணமாக மரண தண்டனை விதிக்கப்பட்ட சில கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் 11 பேரை மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்த ஐந்து பேருக்கு கடந்த 2007 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1988-89 ஆம் ஆண்டில் ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 11 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 12 பேர் காயமடைந்திருந்தனர்.

குறித்த குற்றச் செயலுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களின் மரண தண்டனையும் 20 ஆண்டுகால சிறைத்தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது. இந்த தண்டனை மாற்றத்தினால் மரண தண்டனை அனுபவித்து வரும் ஏனைய கைதிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சியில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவி வகிக்கும் மத்திய மாகாண பிரபல அரசியல்வாதி ஒருவரின் தலையீடு காரணமாக இவ்வாறு தண்டனை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த குற்றவாளிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அரசியல்வாதியின் தலையீடு காரணமாக நீதி அமைச்சு கைதிகளின் தண்டனையை குறைத்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. இதன்படி குறித்த சந்தேக நபர்கள் இன்னும் சில மாதங்களில் விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவல் தொடர்பில் சிறைச்சாலை அமைச்சோ அல்லது சிறைச்சாலை ஆணையாளரோ எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. (அ-2)

# போதையூட்டும் பைகள் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

போதையூட்டும் ஒருவகை புகையிலை அடங்கிய சுமார் 6 ஆயிரம் பக்கெட்டுக்களை கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

சென்னையில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை நாட்டிற்கு வந்த பெண் ஒருவரே போதையூட்டும் புகையிலை பக்கெட்டுகளுடன் வந்துள்ளதாக சுங்கப்பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டார். இந்தப் பெண்ணிடம் இருந்து சுமார் 54 கிலோகிராம் புகையிலை பக்கெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மூன்று இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய இந்தப் புகையிலை தொகையை கொண்டு வந்த பெண் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார். (அ-2)

## 21 அரச தனியார் நிறுவனங்களிடமிருந்து

# இன்னும் 6 ஆயிரத்து 300 கோடி ரூபாவை வசூலிக்க வேண்டிய நிலையில் உள்ளது

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த 21 நிறுவனங்களிடமிருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 6 ஆயிரத்து 300 கோடி ரூபாவை இன்னும் வசூலிக்க வேண்டியுள்ளதாக நாடாளுமன்றத்தில் நேற்று அறிவிக்கப்பட்டது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இத்தகவலை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் மாத்திரம் 5 ஆயிரத்து 200 கோடி ரூபா செலுத்த வேண்டியிருப்பதாக அமைச்சர் கூறினார்.

இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, ஸ்ரீலங்கா ரயில்வே, இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை இராணுவம், கடற்படை, பொலிஸ் திணைக்களங்களிடமிருந்து பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குரிய பணம் கிடைக்க வேண்டியுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி 9 தனியார் மின்சார உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குரிய பணம் நிலுவையில் இருந்ததாகவும் பெரும்பாலான நிறுவனங்கள் இவ்வருடம் பெப்ரவரி 29 ஆம் திகதியே கொடுப்பனவுகளை செலுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய பணத்தை தனியார் நிறுவனங்கள் வழங்கத் தவறும்போது அதை வசூலிப்பதற்கான நடைமுறையொன்று இருக்க வேண்டும் என தயாசிறி ஜயசேகர கூறினார்.

மேற்படி நிறுவனங்கள் தற்போது கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான செயன்முறையில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# தனி இராட்சிய கோட்பாட்டை இல்லாமல் செய்ய வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

கடும் போக்குடைய அமைப்புகள் தொடர்ந்தும் இயங்கி வருவதாகவும் அவர்களின் நடவடிக்கைகளினால் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தமிழ் புலம்பெயர் மக்கள் தொடர்ந்தும் புலிகளை வலுப்படுத்த முயற்சிக்கின்றனர்.

தனிஇராச்சிய கோட்பாட்டையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. முதலில் அந்தக் கோட்பாடு இல்லாமல் செய்யப்பட வேண்டும்.

கடும்போக்குடன்கூடிய கோட்பாடுகள் நிலவும் வரையில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்மொழிவுகளை அமுல்படுத்த முடியாது. ஜெனிவாவில் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

ஜெனீவா அமர்வுகளின் போது ஒத்துழைப்பு வழங்கிய நாடுகளிடம் நாம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# துமிந்தவின் இருப்பிடம் குறித்து நீதிமன்றில் அறிவிக்க வேண்டும்

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா எங்கு இருக்கின்றார் என்ற தகவல்களை இன்னமும் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றில் அறிவிக்கவில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் கொலை சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விசாரணைகளுக்கு புலனாய்வு பிரிவு அதிகாரி நீதிமன்றில் ஆஜராகத் தவறியதாக தெரிவிக்கப்படுகிறது.

துமிந்தவின் இருப்பிடம் பற்றிய தகவல்களை உறுதியாக அறிவிக்குமாறு அதற்கு முன்னைய விசாரணைகளின் போது நீதிமன்றம் புலனாய்வு பிரிவினருக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்திருந்தது. (அ-2)

# வடமாகாண மக்களுக்காக மத்திய வங்கியின் கடன் திட்டங்கள்

(கொழும்பு)

வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பல தரப்பட்ட வங்கிக்கடன் உதவிகளை வடமாகாண மத்திய வங்கி வழங்கி வருவதாக வங்கியின் பிரதி முகாமையாளர் பா.சிவதீபன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆண்டு பிற்பகுதியிலிருந்து இதுவரை மத்திய வங்கி இலகுகடன் திட்டத்தின் மூலம் 6.5 பில்லியன் ரூபா கடன்களை வடமாகாணத்திற்கென வழங்கியுள்ளதாகவும் இதன் மூலம் ஏராளமான மக்கள் பயனடைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயக் கடன், கால்நடைகள் வளர்ப்பதற்கான கடன், வடக்கின் வசந்தம் கடன் திட்டம் (இரண்டாம் கட்டம்) ,சுயதொழில் கடன், சௌபாக்கியா கடன், வறுமை ஒழிப்புக் கடன் ஆகிய கடன் வழங்கல் திட்டங்கள் தற்போது நடைமுறையில் காணப்படுகின்றது.

அத்துடன் உயர்கல்வியை மேற்கொள்வதற்கான கடன் உதவியாக தகுதி அடிப்படையில் 50 ஆயிரம் ரூபா தொடக்கம் வழங்கப்படுகின்றது.

மேலும் மக்களுக்கு இந்தக் கடன் திட்டங்கள் தொடர்பான நிதியியல் விழிப்புணர்வு கருத்தரங்குகளை வடமாகாணத்திற்கான மத்திய வங்கி பல இடங்களில் குறிப்பாக முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் போன்ற போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நடத்தி வருகின்றது. இது பாரிய முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் கூறினார். (அ-2)

# விளையாட்டு விழா

(பூந்தோட்டம்)

வவுனியா சுந்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினால் நடத்தப்படும் பாலர் பாடசாலையின் 19 ஆவது ஆண்டு விளையாட்டுவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சங்கத் தலைவர் நா.சேனாதிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவு. தமிழ் ம.ம.வி. அதிபர் எம்.எஸ்.பத்மநாதன், சிறப்பு விருந்தினராக மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-266)




சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் முதியோரின் திறமைகளை வெளிப்படுத்தவும் பாராட்டவும் கைப்பணி பொருட்காட்சி மற்றும் விற்பனை கொழும்பு கலாபவனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. நாட்டிலுள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள முதியோர்களினால் தயாரிக்கப்பட்ட பொருட்களே இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 92



ஜேர்மனிய இராணுவக்கொமாண்டர் சோவியத் ரஸ்யாவில் தம்மால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வித்தியாசமான சில மான்களின் அழகான கொம்புகளைச் சேகரித்துள்ளான்

## யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

இதே ஆண்டில் பிரிட்டனின் இராணுவ தொழித்துறை 26 ஆயிரத்து 300 விமானங்கள், 7500 டாங்கிகள் மற்றும் தானியங்கி பீரங்கிகள் 1இலட்சத்து 18 ஆயிரம் 200 பல்வேறுவித பீரங்கிகள், 17ஆயிரத்து100 மார்டர் பீரங்கிகள், 85 பிரதான ரகச் சண்டைக் கப்பல்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தது. 1943 இறுதியில் பிரிட்டிஷ் இராணுவத்தில் 44 இலட்சத்து 35 ஆயிரம் பேர் இருந்தனர். கிரேட் பிரிட்டனின் டொமினியன்களிலும் காலனிகளிலும் இருந்த இராணுவங்களும் பிரிட்டிஷ் படைத்தலைமைக்கு உட்பட்டிருந்தன. இந்நேரத்தில் இவற்றின் எண்ணிக்கை 40 இலட்சத்துக்கும் அதிகமானதாக இருந்தது. (கனடாவில் 6 இலட்சத்து 80 ஆயிரம் பேர் அவுஸ்திரேலியாவில் 6 இலட்சத்து 95 ஆயிரம் பேர், நியூசிலாந்தில் 1இலட்சத்து 30 ஆயிரம் பேர், தென்னாபிரிக்க ஐக்கியத்தில் சுமார் 3இலட்சம் பேர், இந்தியாவில் 20 இலட்சத்து 23 ஆயிரம் பேர், ஆபிரிக்க காலனி துருப்புகளில் 3இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இருந்தனர்).

பிரிட்டிஷ் இராணுவத்தில் பாதிக்கும் மேற்பட்ட பகுதி தலைமைநாடுகளில் இருந்தது. தரைப்படையிலிருந்த 37 டிவிசன்கள், 21 தனி பிரிகேடுகளில் 24 டிவிசன்கள்





அமெரிக்க அரசின் பிரச்சாரச் சுவரொட்டி

மற்றும் 6 பிரிகேடுகள் பிரிட்டிஷ் தீவுகளிலும், 12 டிவிசன்கள் மற்றும் 12 பிரிகேடுகள் மத்தியதரைக் கடல் போர்க்களத்திலும் 1 டிவிசன் மற்றும் 3 பிரிகேடுகள் இந்தியாவிலும் இருந்தன. டொமினியன்கள் மற்றும் காலனிகளின் துருப்புகளில் பெரும் பகுதியை கிரேட் பிரிட்டனின் அரசாங்கம் உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து தன் உடைமைகளைப் பாதுகாப்பதற்காக நிறுத்தியிருந்தது.

பாசிச ஜேர்மனிய படைத்தலைமை தனது முக்கிய சக்திகளை சோவியத்-ஜேர்மனியப் போர் முனையில் குவித்தது. இப்போர்முனைதான் ஜேர்மனிக்குப் பிரதானமாக இருந்தது என்பதை இது காட்டுகிறது. அதே நேரத்தில் ஐரோப்பாவில் பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளின் நடவடிக்கைகள் மட்டானவையாக இருந்தன. உதாரணமாக, 1944 தொடக்கத்தில் இத்தாலியப் போர் முனையில் ஹிட்லரின் 20 டிவிசன்களுக்கு எதிராக நேசநாடுகளின் 13.5 மில்லியன் பேரடங்கிய படையில் 16 பிரிட்டிஷ் டிவிசன்களும் 9 அமெரிக்க டிவிசன்களும் மட்டுமே செயற்பட்டன. இவ்வாறாக மேலைய நேசநாடுகளின் இராணுவத்தில் சிறிய பகுதி மட்டுமே பாசிசக் கூட்டணியின் படைகளுக்கு எதிராகப்போரிட்டது.

1943 ஆம் ஆண்டின் இறுதியில் சோவியத்- ஜேர்மனியப் போர்முனையில் உருவாகிய அனுகூலமான நிலவரம், 1944 ஆம் ஆண்டு தன் நாடுமுழுவதையும் பாசிச ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கவும் இராணுவ நடவடிக்கைகளை எதிரியின் பரப்பிற்கு மாற்றவும் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஐரோப்பிய மக்களை ஹிட்லர் கொடுமையிலிருந்து விடுவிக்கத் தொடங்கவும் சோவியத் இராணுவத்திற்கு வாய்ப்பளித்தது. செஞ்சேனையின் நடவடிக்கைகளுக்கு எது அனுகூலமாயிருந்தது?

1941-1943 ஆம் ஆண்டுகளின் நடவடிக்கைகளில் போர்த்தந்திர முன்முயற்சிக்காக போராட்டம் நடந்தது என்றால், 1944 ஆம் ஆண்டின் நடவடிக்கைகளில் போர்த்தந்திர முன்முயற்சி செஞ்சேனையின் கரங்களில் உறுதியாக இருந்தது. பரவலான போர்முனையில் பல்வேறு திசைகளில் பல தொடர்ச்சியான, பரஸ்பரத் தொடர்புடைய தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இது செஞ்சேனைக்கு வழிவகுத்தது. இந்நடவடிக்கைகளின் விளைவாய் ஜேர்மனியப் படைத்தலைமை தனது சக்திகளையும் சாதானங்களையும் தனித்தனியே பிரித்து பகுதி பகுதிகளாகச் சண்டையில் ஈடுபடுத்துமாறு செய்தது.



(தனது விமானத்துக்குள்ளிருந்துகொண்டு)ஆபத்தான ஒரு இயந்திரத்துப்பாக்கி நிலையிலிருந்து எதிரி விமானத்தைச்சுடும் அமெரிக்க சார்ஜென்ட் வில்லியம் வாற்ஸ்

எனவே, இதனால், தாக்கிவந்த சோவியத் துருப்புகளுக்கு பெரிய பதில் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய இயலவில்லை.

பாசிச ஜேர்மனிப்படைத் தலைமை, மேற்கொண்டு யுத்தத்தை நடத்தும் தனது திட்டங்களில், ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியில் பிளவு ஏற்படும் என்பதன் மீது பெரும் நம்பிக்கை வைத்திருந்தது. 1943 ஆம்ஆண்டு கோடையிலும் இலையுதிர் காலத்திலும் கடும் தோல்விகள் ஏற்பட்ட போதிலும், இப்பிளவு ஏற்படும்வரை ஜேர்மனிய இராணுவத்தால் சோவித் இராணுவத்திற்கு எதிராக இழுபறியான தற்காப்பு யுத்தத்தை நடத்த முடியும் என ஹிட்லர் படைத் தலைமை கருதியது. இதற்கேற்ப பாசிச ஜேர்மனிய படைத்தலைமை 1944 ஆம் ஆண்டு சோவியத்- ஜேர்மனியப் போர்முனை பூராவும் உறுதியாகத் தற்காப்பு நிலையை மேற்கொள்வது என்றும் ஆழ்படை வரிசைகளைக் கொண்ட தற்காப்பையும் இயற்கையான எல்லைகளையும் ஆதாரமாகக் கொண்டு தன் நிலைகளைத் தக்கு வைப்பது என்றும் திட்டமிட்டது. இத்தோடு கூட தினேப்பர் ஆற்றின் மேற்கு கரையிலிருந்த சோவியத் துருப்புகளின் தாக்குமுனைகளை அழிப்பது என்றும் கிரீமியாவில் துண்டிக்கப்பட்ட தன் படைத் திரட்டுடன் இணைவது என்றும் இதன் மூலம் கிழக்கு அரணில் தற்காப்பைப் புனரமைப்பது என்றும் திட்டமிட்டது. ஆனால், யுத்தத்தின் போக்கில் ஹிட்லர், எதிர்ப்புக் கூட்டணியில் பிளவு ஏற்படும் என்று ஹிட்லர் நம்பிக்கை கொண்டிருந்ததானது, பாசிச ஜேர்மனியத் தலைமையின் அதிசாகசத்தன்மையை நன்கு வெளிப்படுத்துகிறது. விடுதலை நாட்டமுள்ள மக்களுடைய அடிப்படை நலன்களின் பொதுமையும் சோவியத் யூனியனின் விவேகமான வெளிநாட்டுக் கொள்கையும் யுத்தம் தொடரும்வரை கூட்டணி நீடித்திருக்க வகை செய்தன என்பதை இது கவனத்தில் கொள்ளவில்லை. பாசிஸ்டுகள் சோவியத் இராணுவத்தையும் சோவியத் போர்க் கலையையும் முன்போன்றே சரிவர மதிப்பிடாததும் மாறாக தமது சக்திகளை குறிப்பாக ஜேர்மனியப் போர்க்கலையை மிகைப்படுத்தி மதிப்பிட்டதும் ஹிட்லரின் திட்டங்கள் தவிடுபொடியானதற்குக் காரணங்களாகும்.

(தொடரும்)

# சர்வதேசத்தில் ஆஜராக வேண்டிய நிலைக்கு

# வெளியுறவு கொள்கையே காரணம்

## வெளியுறவு அமைச்சரை பதவி விலகவும் கோரிக்கை

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் பதவி விலக வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு சாதகமான வெளியுறவுக்கொள்கை ஒன்றை அமுல் படுத்த முடியாவிட்டால் வெளிவிவகார அமைச்சர் பதவி வில்க வேண்டும்.

தேசிய நோக்கங்களைக் கருத்திற் கொண்டு நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் அமுல்படுத்தப் படவில்லை. மாறாக தனிப்பட்ட காரணங்களை முன்னிலைப்படுத்தி வெளியுறவுக் கொள்கைகள் அமுல் படுத்தப்படுகின்றன.

இதன் காரணமாக நாடு சர்வதேச ரீதியில் ஆஜரான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இலங்கை தொடர்பில் உலக நாடுகளின் நம்பிக்கையை வென்றெடுக்க கூடிய வகையில் வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றம் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் பிழையான வெளியுறவுக் கொள்கைகளே பிரச்சினைகளுக்கான காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வெளிநாடுகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. போர் வெற்றி கொள்ளப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் காரணமாகவே ஜெனீவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இந்தியா ஒருபோதும் இலங்கைக்கு எதிராக வாக்களித்ததில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நெல் விலை அதிகரிக்கப்பட வேண்டும்

## நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை

(கொழும்பு)

நெல்விலை அதிகரிக்கப்பட வேண்டும் என நெல் விலை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை செய்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன குறிப்பிடுகின்றார். இந்த பரிந்துரைகள் தற்போது நிதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த போகத்தின் போது நெல்விலை அதிகரிக்கப்பட மாட்டாது என அமைச்சர் சுட்டிக்காட்டுகின்றார். அடுத்த போகத்தில் இருந்து நெல் விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என விவசாய அமைச்சு தெரிவிக்கின்றது.

பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட பெருந்தொகை நெல் ஏற்கனவே சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதால் இந்த சந்தர்ப்பத்தில் விலை அதிகரிக்கப்படுவதில் பயனில்லை என அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன குறிப்பிடுகின்றார்.

இம்முறை பெரும்போகத்தின் போது 2.5 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப்பட்டிருந்ததாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் தற்போதுள்ள நிலைமையின் கீழ் இலக்கினை விடவும் அதிகளவிலான நெல் அறுவடை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# கடனட்டை மோசடி; இருவர் கைதாகினர்

மட்டக்களப்பில் உள்ள தனியார் வங்கியொன்றில் கடன் அட்டையொன்றை பயன்படுத்தி வங்கிக் கணக்கிலிருந்து 11 ஆயிரம் ரூபாவை திருடிய இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கிடைத்த தகவலுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து கடன் அட்டைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

'சந்தேக நபர்கள் இருவரும் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)





வவுனியா பறன்நட்டகல் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பாரிய வாகன விபத்தில் விபத்துக்குள்ளான வாகனங்களை படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர்)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## மானிடர்க்கு உண்மை வாழ்வளிப்பது இயேசுவின் திருவுடலும் திரு இரத்தமுமே



அப்பத்தின் வடிவத்திலும் இரசத்தின் வடிவத்திலும் ஆண்டவர் இயேசுவின் திருவுடலும் திரு இரத்தமும் அவர் ஆன்மாவும் தெய்வீகமும் அடங்கிய திருவருட் சாதனமே நற்க்ருணை எனப்படும். இதுவே கத்தோலிக்க திருச்சபையின் உயிர்நாடி. மனிதனோடு வாழும் இறை இயேசுவின் குறையில்லாத இறைப் பிரசன்னம். மனிதனை வாழவைக்கும் உள்ளுயிர் வலுப்பெற்ற உரமூட்டும் ஆன்மீக உணவு. மனிதன் வாழ கல்வாரியில் பலியான, பலியாகும் ஒரே பலி நற்கருணை என்று நாம் விசுவாசிக்கின்றோம். நம் மீட்பர் தாம் காட்டி கொடுக்கப்பட்ட இரவிலே தமது இறுதி இராவுணவுப் பந்தியில் தம் உடல், இரத்தம் ஆகியவற்றாலான நற்கருணைப் பலியை ஏற்படுத்தினார்.

தாம் மீண்டும் வருமளவும் எல்லாக் காலங்களிலும் தமது சிலுவைப் பலியை நின்று நிலவச் செய்தார்.

**அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி**

தம் அன்பு மணமகளாம் திருச்சபையிடம் தமது இறப்பு உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் நினைவுச் சின்னத்தை விட்டுச் செல்லவும் இப்பலியை ஏற்படுத்தினார். நற்கருணை விருந்திலே கிறிஸ்து உண்ணப்படுகிறார். அதன் மூலம் நாம் அருளால் நிரப்பப்படுகின்றோம் என்பதே கிறிஸ்தவ விசுவாசமாகும்.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் தனக்கு விடுதலை வேண்டி அதற்காக உழைப்பதை நாம் காண முடிகின்றது. இந்த வகையில் மானிடர்க்கு உண்மை விடுதலை வாழ்வை அளிக்கவல்லது நற்கருணையே.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் மக்கள் உணவிற்காக அலைந்து பரிதவிக்கும் வேளையில் மனித குலத்தின் மூன்றில் ஒரு பங்கு மனிதர்கள் பசியுடன் படுக்கைக்குச் செல்லும் வேதனையான காலத்தில் இறைவன் தம்மையே உணவாக வழங்கும் நிகழ்வு உண்மையிலேயே அவர்களுக்கு விடுதலை வாழ்வை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

அன்று துன்பத்தின் சுமைகளில் கலங்கிய மனிதர்களுக்கு விடுதலை வாழ்வைக் காட்டிய அதே இறைவன் துன்புறும் எம் மக்களுக்கு உண்மை விடுதலை வாழ்வளிக்க நற்கருணை வடிவில் பிரசன்னமாயிருக்கிறார் என்ற நம்பிக்கையில் அவரிடம் செல்வோம்.

# விடைத்தாள் மதிப்பீட்டு ஊதியம் கிடைக்கவில்லை

## இலங்கை ஆசிரியர் சேவைசங்கம் குற்றச்சாட்டு

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கான ஊதியங்களை அரசாங்கம் வழங்கத் தவறியமைக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னரும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை பரீட்சைகள் திணைக்களம் வழங்கவில்லை என அச்சங்கத்தின பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க கூறியுள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்திற்கான சுமார் 300 மில்லியன் ரூபாவை திறைசேரி வழக்கவில்லை என நாம் அறிந்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். பரீட்சை நடைபெற்ற காலத்திலும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்த காலத்திலும் ஆசிரியர்களும் அதிபர்களும் உணவு, போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளுக்கு தமது சொந்தப் பணத்தை செலவிட வேண்டியிருந்தது.

அதிக செலவீனங்களுக்காக அறியப்பட்ட இந்த அரசாங்கம் இவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கத் தவறியமை குறித்து வெட்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார். 2 ஆயிரத்து 500 ரூபாவுக்குள் எவரும் இறக்காமல் வாழ்க்கை நடத்த முடியும் என்பதை போன்ற கருத்துக்களை கூறாமல் சிங்கள- தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் எனவும் அச்சங்கம் கோரியுள்ளது. (அ-2)

# சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர்

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் நேற்று வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தங்க ஆபரண விற்பனை நிலையங்கள் இரண்டை உடைத்து அதிலிருந்து தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களை கொள்ளையிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் நான்காம் திகதி இடம்பெற்ற இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்றுமுன்தினம் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

இவர்களால் கொள்ளையிடப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் சிலவற்றையும் பொலிஸார் இத்ன்போது கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)




## அம்புலி மாமா கதைகள்

## நூற்றுக்கு ஒன்று குறைவு!

சந்தன்,நந்தன் இருவரும் அடுத்தடுத்த வீடுகளில் வசித்து வந்தனர்.சந்தன் ஒரு பணக்கார வியாபாரி. அவர் வசித்தது ஒரு பெரிய வீட்டில்! ஆனால் நந்தன் கூலி வேலை செய்து பிழைப்பவன். அவன் வசித்தது ஒரு குடிசையில்! இருவரும் எதிர்எதிரான துருவங்களாயிருந்தும் நண்பர்களாக இருந்தனர். அவர்களைப் போலவே சந்தனின் மனைவி ஈஸ்வரியும் நந்தனின் மனைவி சாருமதியும் தோழிகளாக இருந்தனர்.

நந்தன் அடிக்கடி தன் வீட்டிற்கு யாராவது விருந்தாளிகளை அழைத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அறுசுவை விருந்து படைக்கத் தேவையான பணவசதி இல்லாமலிருந்தும் இருப்பதைக்கொண்டு எளிய சுவையான உணவுகளை சமைத்து விருந்தாளிகளுக்கு சாருமதி பரிமாறி வந்தாள்.

அவ்வாறு விருந்தாளிகள் நந்தன் வீட்டில் இருக்கும்போது அங்கு ஒரே குதூகலமும் மகிழ்ச்சியும் நிரம்பிய குரல்கள் கேட்கும். கூலிவேலைசெய்து பிழைக்கும் நந்தனால் எப்படி விருந்தினர்க்ளை அடிக்கடி வீட்டிற்கு அழைத்து வரமுடிகிறது என சந்தனின் மனைவி ஈஸ்வரி குழம்பினாள். தன்னுடைய சந்தேகத்திற்கு பதில் காண ஈஸ்வரி பெரிதும் ஆர்வம் கொண்டாள். ஆனால் தன்னுடைய சந்தேகத்தை நேரிடையாகவே சாருமதியிடம் கேட்க அவளுக்கு கூச்சமாக இருந்தது. இருந்தாலும் ஆர்வத்தை அடக்கமுடியாமல் ஒருநாள் கேட்டுவிட்டாள்.

அதற்குச் சாருமதி புன்னகையுடன், "நாங்கள் குறைந்த அளவில் சம்பாதிப்பதால் எதிர்காலத்திற்காக எதையும் சேமிப்பதில்லை. கிடைக்கும் பணத்தை அவ்வப்போதே செலவு செய்துவிடுகிறோம். நாங்களும் சாப்பிட்டு விருந்தினர்களுக்கும் படைக்கும் அளவிற்கு என் கணவரால் எப்படி வருமானம் ஈட்டமுடிகிறது என்பது அவருக்குத்தான் தெரியும்!" என்றாள்.

அன்றிரவு இதைப்பற்றி ஈஸ்வரி தன் கணவன் சந்தனிடம் கூறினாள். அதற்கு அவர், "அவர்களுக்கு தொண்ணூற்றொன்பதின் மகிமை தெரியாது. அதனால்தான் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கை நடத்துகின்றனர். ஒரு முறை அவர்களுக்கு அந்த அனுபவம் கிடைத்துவிட்டால் அதற்குப் பின்பு அவர்களுடைய வாழ்க்கையில் நிம்மதியும் மகிழ்ச்சியும் பறந்துவிடும்" என்றார்.

"அது என்ன தொண்ணூற்றொன்பது?" என்று ஈஸ்வரி ஆவலுடன் கேட்டாள். "நூற்றுக்கு ஒன்று குறைவு! அவ்வளவுதான் இப்போது என்னால் சொல்ல முடியும். ஆனால் அது அவர்களை எப்படி ஆட்டிவைக்கப்போகிறது என்று நீ பொறுத்திருந்து பார்!" என்று புதிர்போட்டார் சந்தன்.



சில நாட்கள் சென்றன. பக்கத்து வீட்டில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. இரவு நேரங்களில் வீட்டின் கொல்லைப்புறத்தில் நந்தனும் சாருமதியும் மும்முரமாகப் பாய் பின்னுவதைப் பார்த்து வியந்தாள். விருந்தாளிகள் அவர்கள் வீட்டிற்கு வருவது நின்று விட்டது. சில நாட்களில் நந்தன் கூலி வேலை செய்துவிட்டு விரைவாகவே திரும்பி வந்து பாய்முடைவதில் ஈடுபடுவதைப் பார்த்தாள்.

பக்கத்து வீட்டில் கண்கூடாக நிகழ்ந்த மாறுதல்கள் ஈஸ்வரியைக் கவலைப்படச் செய்தன. அவளுக்கு வருத்தமளித்த மற்றொரு விடயம் இப்போதெல்லாம் சாருமதி தன்னுடன் மதிய நேரத்தில் அரட்டை அடிக்க வருவதை நிறுத்திவிட்டது தான்! தன் ஆர்வத்தை அடக்கவே முடியாமல் ஒருநாள் மதியநேரம் ஈஸ்வரி தானாகவே சாருமதியின் வீட்டிற்கு வலியச் சென்றாள்.

தனியாகப் பாய்முடைந்து கொண்டிருந்த சாருமதி, ஈஸ்வரியைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தாள். அதற்கு மேல் பொறுக்க முடியாத ஈஸ்வரி, "சாருமதி! என்மீது உனக்குக் கோபமா? ஏன் முன்போல் என்னுடன் பேச வருவதேயில்லை? உன் கணவருக்குக் கூலி வேலை கிடைப்பது இல்லையா? அதனால்தான் இருவரும் பாய்முடைகிறீர்களா?" என்று கேட்டாள்.

தலைநிமிர்ந்து பார்த்த சாருமதி, "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!" என்றாள். ஈஸ்விரிக்கு சாருமதி எதையோ மறைக்கிறாள் என்று தோன்றியது. "உண்மையைச் சொல்! உனக்கு ஏதாவது பணப்பற்றாக்குறை என்றால் நான் உதவி செய்யத் தயாராக இருக்கிறேன் சொல்" என்றாள்.

ஈஸ்வரியின் வார்த்தைகளைக் கேட்டு நெகிழ்ந்து போன சாருமதி "அப்படியில்லை! நாங்கள் எங்கள் வருமானத்தைப் பெருக்குவதற்காக பாய்முடையும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம்" என்றாள்.

"ஏன்? திடீரென பணம் அதிகமாகத் தேவைப்படுகிறது?" என்று ஈஸ்வரி கேட்டாள். சிறிது நேரத்திற்குப் பின் சாருமதி "உன்னிடம் உண்மையைச் சொல்கிறேன். ஆனால் நீ உன் கணவரிடம் சொல்லக் கூடாது!" என்றாள்.



"சரி!" என்றாள் ஈஸ்வரி. "சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் இது! ஒருநாள் இரவு வேலையில் இருந்து திரும்பிய கணவர் குடிசை வாயிலில் ஒரு மூட்டை கிடப்பதைப் பார்த்தார். அது யாருடையது. எப்படி நமது குடிசைக்கு வந்தது என்று வியந்த அவர், அதைத்தூக்கிக் கொண்டு உள்ளே வருகையில் அதனுள் நாணயங்கள் குலுங்கும் ஒலியைக் கேட்டார். "மூட்டையைப் பிரித்துப் பார்த்தால் உள்ளே வெள்ளி நாணயங்கள் இருந்தன. அவற்றைத் தரையில் கொட்டிய என் கணவர் ஒவ்வொன்றாக எண்ணினார். மொத்தம் தொண்ணூற்று ஒன்பது நாணயங்கள் இருந்தன. "நான் எண் ணியதில் ஏதோ தவறு! மறுபடியும் எண்ணுகின்றேன்!" என்று கூறிய என் கணவர் மீண்டும் நாணயங்களை எண்ணினார். நூற்றுக்கு ஒன்று குறைவாகவே இருந்தது. பின்னர் நானும் எண்ணிப்பார்த்தேன். அதே எண்ணிக்கை தான்!" "ஏன் நூற்றுக்கு ஒன்று குறைவாக இருக்கிறது?" என்று கேட்ட என் கணவருக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. திடீரென ஏதோ தோன்றியவராக அவர் "இதை இப்போது நூறாக்கி விடுகிறேன்" என்று சொல்லி விட்டுத் தான் சம்பாதித்து வந்த பணத்திலிருந்து ஒரு வெள்ளி நாணயத்தை எடுத்து அதனுடன் சேர்த்து எண்ணிக்கையை நூறாக்கினார். பின்பு அந்த மூட்டையைக் கட்டிப் பத்திரமாக பதுக்கி வைத்தார்.

சற்றே நிறுத்திய சாருமதி தொடர்ந்து, "அன்று எங்கள் செலவுகளில் ஒரு வெள்ளிக்காசு குறைத்துக் கொண்டோம். அன்று முதல் திடீரென எங்களுக்குப் பணம் சேமிக்கும் ஆர்வம் உண்டாகிவிட்டது. அதனால் உபரி வருமானத்திற்காகப் பாய்முடைய ஆரம்பித்தோம். அதில் கிடைக்கும் வருமானம் அனைத்தையும் அந்த மூட்டைக்குள்ளிட்டு பணம் சேமிக்கத் தொடங்கினோம்" என்றாள்.

"நல்ல காரியம்தான்! ஆனால் உங்கள் வீட்டிற்கு அடிக்கடி வரும் விருந்தாளிகள் என்ன ஆனார்கள்?" என்று ஈஸ்வரி கேட்டாள்.

"அதுவா? நாங்கள் கிடைக்கும் நேரத்தில் பாய்முடைய ஆரம்பித்து விட்டதால் முன்போல் விருந்து சமைக்க நேரம் கிடைக்கவில்லை. அதனால் விருந்தினர்களை அழைப்பதில்லை" என்றாள் சாருமதி.




தொண்ணூற்றொன்பதின் மகத்துவத்தைப் புரிந்து கொண்ட ஈஸ்வரி தன் வீட்டிற்குத் திரும்பினாள். பக்கத்து வீட்டில் நிகழ்ந்த மாறுதல்களை அவளுடைய கணவரும் கவனித்தார். என்றாலும் அவளிடம் அதைப்பற்றி ஒன்றும் பேசவில்லை. ஆனால் மாறுதல்களை நிகழ்த்திய தொண்ணூற்று ஒன்பதின் மகிமை அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அந்த மூட்டையை வைத்தது இவர்தானே!



# யாழ். திருநெல்வேலி திருவளர்மிகு ஸ்ரீ நீலாயதாட்

## தேவஸ்தான மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்—06.0

## சிவாச்சாரியாரின் நல்லாசிகள்




யாழ்ப்பாணம் திருநெல்வேலி திருவருள்மிகு ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத ஸ்ரீகாயாரோகண சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக பெருவிழா இன்று எம் பெருமானின் திருவருள் துணையுடன் நடைபெறு கின்றது. அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்கின்ற மணிக்கவாசகர் பெருமானின் திருவாக்கிற்கமைய எங்கள் மூதாதையர்களால் நித்திய நைமித்திய பூசைகள் காலாகாலமாக நிறைவேற்றி வழிபட்டு வந்த திருத்தலம் இதுவாகும்.

தொடர்ந்தும் எமது வழித் தோன்றல்களை இவ்வாலயம் பராமரிக்கப்பட்டு வருவதோடு காலந்தவறாது பூசைவழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. ஆலயத்ததில் பாலஸ்தானம் நடைபெற்று மிக விரைவாக குறுகிய காலத்தில் ஆலய புனரமைப்பு பணிகள் நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேக பெருஞ்சாந்தி நிகழ்வினை தரிசிக்கின்ற பேறு யாவர்க்கும் கிடைத்திருக்கின்றது.

பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் இக் கும்பாபிஷேகத்தை காணும் திருவருட் பாக்கியம் எமக்கு கிடைத்திருக்கின்றது. இப்புனித கிரியையின் மூலம் எமது நாட்டில் புரையோடிப் போயுள்ள துன்ப துயரங்கள் எல்லாம் நீங்கி சாந்தியும் சமாதானமும் சுக வாழ்வும் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமியின் பாதக்கமலங்களை பிரார்த்திப்போமாக.

**பிரம்ம ஸ்ரீ சதாசிவக் குருக்கள்**
**தேவஸ்தானம் பிரதமகுரு**

## திருப்பணிச் செயலாளரின் பிரார்த்தனையுரை




சைவப் பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது மட்டுமல்ல பசுவதைக்கு அஞ்சி இரவோடு இரவாக தமிழகம் சென்ற ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரால் பெருமையுள்ளதும், பழைமை வாய்ந்ததுமான ஆலயங்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டு விளங்குவது திருநெல்வேலிநகரம்.


திருநெல்வேலிக்கிராமத்தில் இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் 1974 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சிவாலயமாக விளங்குவது திருவருள்மிகு ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத காயாரோகண சுவாமி ஆலயம் ஆகும். இவ் ஆலயத்தை எனது தந்தையாராக விளங்கிய நல்லையா மாஸ்ரர் என எல்லோராலும் அழைக்கப்பட்ட பரஞ்சோதிஅவர்கள் செயலாளராகவும் சிரேஷ்ட சட்டத்தரணி சி.நாகராசா அவர்கள் தலைவராகவும் டாக்டர் மு.கந்தசாமி அவர்கள் பொருளாளராகவும் சிவலிங்கம், சிவசாமி ஆகியோர் ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயாரோகண ஆலய திருப்பணி வேலைகளை சிவனடியார்களின் பூரணமான ஒத்துழைப்புடன் ஆரம்பித்தோம். அதற்கமைய குறுகிய காலத்தில் இப்பணிகளை நிறைவேற்றி 2012 ஆம் ஆண்டில் மஹா கும்பாபிஷேக பெரும் சாந்திவிழாவை காணும் பேறு கிடைத்துள்ளது. இவ் ஆலயத்தின் முன்னைய கும்பாபிஷேக பெருவிழாவும் அடியேன் செயலாளராக பணியாற்றிய காலத்திலே நிறைவேற்றப்பட்டது என் பாக்கியம். அதுபோன்று இவ் இரண்டாவது கும்பாபிஷேகமும் இன்று வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் ஆலயத்தில், நித்திய நைமித்திய பூசை வழிபாடுகள் தடைப்பட்டாலும் இங்கு தொடர்ந்து நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. அது மட்டுமன்றி 1995 இல் ஏற்பட்ட இடப் பெயர்வுகளின் போது கூட நகரில் ஏற்பட்ட உணவுப்பற்றாக்குறை நிலவியபொழுது ஆலயத்தில் இந்நிலை சுமுகமாகவே நிறைவேற்றப்பட்டது. அந்த வகையில்தான் ஆலயத்தின் இவ்வாண்டு மஹோற்சவத்திற்கு இடையூறு ஏற் படக்கூடாது என்ற நோக்கில் திருப்பணிகளை விரைவாக முடிவுற திருவருள் கிட்டியுள்ளது.

அந்த வகையில் ஆலயக் கட்டடப்பணிகளை துரிதமாக நிறைவேற்றிய சீர்காழி கொல்லிடத்தைச் சேர்ந்த சிற்பாசாரி கலைஞர் புருசோத்மன் அவர்களுக்கும் கட்டட ஒப்பந்தகாரராக விளங்கிய ஊரெழுவைச் சேர்ந்த திருசண்முகநாதன் (Jeya Sunjan construction) அவர்களுக்கும் ஆலய வர்ணவேலைகளை நிறைவேற்றிய திருநெல்வேலி ரவி ஆட்ஸ் உரிமையாளர் தணிகாசலம் அவர்களுக்கும் ஆலய உட்பிரகார நில வேலைகளை பொறுப்பேற்று அமைத்துத்தர முன்வந்த அன்பர்களுக்கும் செயலாளர் என்ற வகையில் மனம் நிறைந்த நன்றியினை தெரிவிப்பதோடு, கும்பாபிஷேகம் காணும் நீலாயதாட்சி சமேத காயாரோகண சுவாமியின் நல்லருள் எல்லோர்க்கும் கிடைக்க பிரார்த்திப்போமாக.

**ந.ஸ்ரீதரன்**
**செயலாளர், ஆலய வழிபடுவோர் சபை.**







### நலமுடனே வாழுவோம்

ஆனந்தக் கூத்தாடியவர் அகமகிழ்ந்து வந்திட
ஆதிசக்தி தேவியாரும் அவருடனே வந்திட
தும்பிக்கை கணபதி அன்புகொண்டு வந்திட
கோலமயில் வேலவனும் குன்றை விட்டு வந்திட
குடும்பம் ஒன்று கூடி குணமுடனே வாழ்ந்திட
மற்றதெய்வம் அனைத்தும் மனமகிழ்ந்து ஆசிக்க
முந்தி வந்த தேவரும் முகமலர்ந்து நோக்கிட
வான் கொடுத்த வளமனைத்தும் வாழ்த்து சொல்லி மகிழ்ந்திட
மங்கலங்கள் யாவையும் மாறி மாறி வந்திடும்
நன்றி சொல்லி நாளும் நலமுடனே வாழ்வோம்

**சிவனடியான்**

## ஆலய வரலாறு

திருநெல்வேலி திருவருள் மிகு ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயாரோகண சுவாமியின் ஆலயம் 1774 ஆம் ஆண்டு திருமடந்தை நாதமுதலியார் பரம்பரையினரால் கட்டப்பட்டது.

ஆலயத்தில் வடபுறத்தில் முத்துமாரியம்மன் ஆலயமும் வடகிழக்கில் தலங்காவற்பிள்ளையார் கோவிலும் தெற்கே வீரமாகாளியம்மன் ஆலயமும் அமைந்து காட்சியளிக் கின்றன.

இவ்வாலய காவல் தெய்வமாக தலங்காவற் பிள்ளையார் கோவில் விளங்குகின்றமையால் தலங்காவற் பிள்ளையாரை காயாரோகண மூத்தநயினார் எனவும் அழைக்கின்ற மரபுண்டு. இவ்வாலயத்தின் மூலவராக காயாரோகணேஸ்வரரும் தெற்கு நோக்கிய திசையில் நீலாய தாட்சி அம்பாளும் ஏனைய பரிவார மூர்த்திகளும் காணப்படுகின்றனர்.

ஆண்டு தோறும் இரண்டு பெரும் மஹோற்சவம் ஆலயத் தில் சிறப்பாக நடந்தேறி வருகின்றது. பிரதோச விரதங்கள், கார்த்திகை, ஆவணிச்சதுர்த்தி, சிவராத்திரி, சோமவாரம், கந்த ஷஷ்டி, நவராத்திரி போன்ற விரத நாட்கள் மிகச் சிறப்பாக நடை பெறுவது குறிப்பிடத் தக்கதொன்றாகும்.


நீலாயதாட்சி சமேத நடராஜப் பெருமான் நடராஜர் சபையில் எழுந்தருளி காட்சியளிப்பது மிகவும் கண்கொள்ளாக் காட்சி யாகும்.

ஆறு
நடைபெற
வருவது
சித்திரத்
பெருவு
கின்றது.
கொண்ட
அற்புதங்
இங்குள்
உடனே
பரம்பரை
வருபவர்
வந்தோர
நடைபெற
1994
ஷேகம்
களின் உ
இத்த
கணேஸ்
கிடைத்த

ஆலயத்திருப்பணிக்கான வங்கிக்கணக்கு இலக்கம்:
இலங்கை வங்கி:-71994585
கொமர்சியல் வங்கி:-1157002001

# ...தாட்சி அம்பிகா சமேத ஸ்ரீகாயாரோகண சுவாமி

# ...–06.04.2012 ( திருநெல்வேலி சிவன் கோயில்)









## தேவஸ்தான பிரதமகுருவின் ஆசியுரை



இலங்கையின் வடபால் யாழ்ப்பாணம் திருநெல்வேலியம் பதியிலே பலநூறு ஆண்டு காலம் கோயில் கொண்டு வேண்டுவோருக்கு வேண்டுவதையெல்லாம் அள்ளி அருள் மழை பொழிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ நீலயதாட்சி சமேத ஸ்ரீ காயாரோகணப் பெருமானுக்கு இன்று வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. பெரியவர்களினதும் நிறை மனமுடையோரினதும் ஆசீர்வாதத்தாலும் எதிர்பார்ப்பாலும் இக்கைங்கரியம் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இலங்கையில் மட்டுமல்லாது உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் மக்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் எம் பெருமான் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ஆலயங்களில் சிறப்பாக பூஜை, அபிஷேகம், திருவிழா என்பன ஒழுங்காக நடைபெறுவதனாலேயே வானம் வாரிவழங்கி நாட்டின் வளம் பெருகுகின்றது.

எம்பெருமானின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வழிவகுத்து ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எம் பெருமானின் தேவஸ்தானம் சார்பிலும் என் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிறவிப்பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

அடியார்கள் அனைவரும் இம்மையிலும் மறுமையிலும் பாவம் வினை அறுத்து பரவசம் அடைய பஞ்சபூதங்களையும் தன்னுள் அடக்கிய பஞ்சகிருத்தியம் புரியும் பரமேஸ்வரனின் பாதார விந்தங்களைச் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

**என்கடன் பணி செய்து கிடப்பதே**

**சிவ ஸ்ரீ சதாசிவகுமாரக்குருக்கள்,**
**(தேவஸ்தான பிரதமகுரு)**

## திருப்பணிகளை நிறைவேற்றி திருவருள் பெறுவோம்



ஆலயங்கள் எமது பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை. வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு எம்மைக் காலங்காலமாக ஆலயங்களே நெறிப் படுத்தி வந்துள்ளன. அவை எமது மக்களின் சமய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற முது மொழிகளுக்கமைவாக ஆலயத்தின் முக்கியத்துவம் பேணப்படுகின்றது.

அந்தவகையில் எமது பழம் பெருமைகளையும் சிவ வழிபாட்டு தொன்மைச் சிறப்புகளையும் காலாகாலமாக பேணிவரும் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயாரோகணசுவாமி (சிவன்கோவில்) ஆலயம் விளங்கிக் காணப்படுகின்றது.

இவ் ஆலய புனர்நிர்மாணப் பணிகளை திருப்பணியாக நிறைவேற்ற தேவஸ்தான பரிபாலன சபையினருக்கும் சிவனடியார்களுக்கும் விரும்பியமைக்கமைய மூன்று கோடி ரூபா செலவில் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால் சுவாமியின் நித்திய நைமித்திய வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்ற நல் நோக்கத்துடன் முக்கிய மான திருப்பணிவேலைகளை முடித்து தற்பொழுது கும்பாபிஷேகத்தினை நிறைவேற்ற இறையருள் கூடிவந்துள்ளது.

எனினும் தொடர்ந்தும் ஆலயத்தில் பாரிய திருப்பணிகளாக வசந்தமண்டபம், யாக சாலை, நடேச சபை, வாகனசாலை, களஞ் சியசாலை, முகப்புமணி மண்டபம் ஆகியன நிறைவேற்றப்படவுள் ளன. ஆலயம் ஒரு கலையம்சம் பொருந்திய திருக்கோவிலாக திரு நெல்வேலி நகரத்தில் அமைய வேண்டுமென்ற நல் நோக்கத் துடன் இப்பணிகள் தொடர்ந்தும் நடைபெறவுள்ளன.

பூரணபொலிவோடு காட்சிதரவுள்ள எமது சிவாலய திருப்பணிகளுக்கு அடியவர்களின் பூரணமான பங்களிப்பினை பரிபாலனசபையினர் எதிர்பார்த்துள்ளனர்.

நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்சொல் அருளீர்

என்ற சிந்தனைக்கமைய சிறு துணி பெருவெள்ளம் போல சிவனின் திருப்பணிக்கு அனைவரும் உங்களளவிலான உதவிகளை புரியவேண்டுமென வேண்டி இன்று நடைபெறும் மஹா கும்பாபிஷேக சிறப்புகளைச் சேர்த்து பெருமானின் திருவருள் கடாட்சத்தினை வேண்டுவோமாக.

**திரு. மயூரன், பொருளாளர்,**
**ஆலய வழிபடுவோர் சபை.**

வு

...ரோகண
...தலியார்
...கிழக்கில்
...யம்மன்
...கோவில்
...ரோகண
...ன் மூல
...ய தாட்சி
...யத் தில்
...த்திகை,
...வராத்திரி
...றிப்பிடத்
...ந்தருளி


ஆறு தடவைகள் நடராஜ பெருமானுக்கு வருடத்தில் அபிஷேகம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மார்கழித் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது. 1980 ஆம் ஆண்டு இவ் ஆலயத் துக்கான புதிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டிருக்கின்றது. இச் சித்திரத் தேரானது தஞ்சைப் பெருவுடையார் ஆலய மூலவர்ஸ்தூபியின் அமைப்பை ஒத்ததாக காட்சியளிக்கின்றது. அத்துடன் ஆலயத்துக்கு அழகுசேர்க்கும் சப்ததளங்களைக் கொண்ட இராஜகோபுரம் அமைந்து காணப்படுகின்றது. இவ்வாலயத்தில் பல அற்புதங்கள் நடைபெற்றுள்ளன. ஒரு காலத்தில் மழையில்லாத வேளையில் இங்குள்ள நந்தியெம்பெருமானுக்கு சிறந்த முறையில் அபிஷேகம் செய்ய உடனே மழைபொழிந்த வரலாறு இக் கோயிலுக்கு உண்டு . இவ்வாலயத்தில் பரம்பரை பரம்பரையாக பூசகர்களாகவும் ஆதீனகர்தாக்களாகவும் விளங்கி வருபவர்கள் அந்தணர்களே. அந்த வழியில் பரமசாமிக் குருக்களின் வழி வந்தோரால் இன்றும் நித்திய நைமித்திய கிரியைகள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

1994 ஆம் ஆண்டு பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் பொதுமக்களின் உதவியுடன் காலந்தோறும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இத்தகு சிறப்புக்களை கொண்டு விளங்கும் நீலாயதாட்சி சமேத காயாரோகணேஸ்வர ஆலயத்தில் இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற அருள் கிடைத்தது பெரும் பேறாகும்.

**ஆலய வழிபடுவோர் சபை.**

## 'நீலாய தாட்சியை அருளும் காயரோகணரே! திருநெல்வேலியில் குடநீராடி அருள்வாய்



*பிட்டுக்கு மண் சுமந்த பெருமானே! மனையாட்டி*
*கட்டுக்குள் கைகட்டி நின்ற சிவனே! கணக்கின்றி*
*பிரம்படிகள் பெற்றவனே பேசும் திரு வாசகத்தில்*
*தரம் காத்து வாழ்பவனே தமிழானவனே குடநீராடி அருள்வாய்*

*இடுகாட்டில் கூத்தாடி இரவெல்லாம் அலைபவனே*
*இடும்பா வனத்தில் இறையாகிக் காப்பவனே*
*முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பவனே!*
*தில்லைப் பெருமன்றில் திருநடனம்*
*புரிபவனே குடநீராடி அருள்வாய்*

*கங்கைத் தலையானே கரு நீலம் உண்டவனே*
*மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தவனே*
*பற்றெல்லாம் விட்டுப் பரதேசி ஆன சிவனே!*
*கற்றைச் சடையானே கயிலாய மலையானே குடநீராடி அருள்வாய்*


*சுடலைப் பொடியானே சுடுகாட்டில் கிடப்பவனே*
*கடலை நிகர்த்த கருணை மனத்தவனே*
*காளைக் கொடியானே நீலாயதாட்சி அம்மையை*
*ஆளும் நாயகனே ஆடலிலே வல்லவரே குடநீராடி அருள்வாய்*


*ஆனைத்தோல் புலித்தோலால் அங்கம் மறைத்தவனே!*
*வானை அனைத்தவனே வண்டமிழைக் காப்பவனே*
*வில்லடியும் கல்லடியும் விருப்பமுடன் பெற்றசிவனே*
*விடையேறும் காயரோகண ஈசனே குட நீராடி அருள்வாய்*



**வர்ணனைக் கலாநிதி காரை எம்.பி அருளானந்தா**

# விபத்திலிருந்து தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் மோட்டார்சைக்கிள்






இலகுவான பிரயாணங்களுக்குப் பயன்படுத்தப்படும் மோட்டார்சைக்கிள்கள் 2 சக்கரங்களை கொண்டிருப்பதனால் அதனைச் செலுத்துபவர் சமநிலையை பேண வேண்டும்.

அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் சரியான முறையில் அவற்றைச் செலுத்தமுடியாது. இதனால் பலர் மோட்டார்சைக்கிள்களை நினைத்தே பார்ப்பதில்லை.

இதை உணர்ந்து கொண்ட சன்பிரான்சிஸ்கோவில் அமைந்துள்ள Lit Motors நிறுவனமானது இரு சக்கரங்களைக் கொண்டதும் சுயமாகவே சமநிலையைப் பேணக்கூடியதுமான மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்துள்ளது.

இவை சாதாரண மோட்டார்சைக்கிள்களைப்போல் அல்லாது மூடிய தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

# நாய்ப்பொம்மையைக் காப்பாற்ற காரை அடித்து நொருக்கிய பொலிஸார்!



இரண்டு பொலிஸார் கார் ஒன்றின் பக்கவாட்டுக் கண்ணாடியை அடித்து நொருக்கியுள்ளார்கள்.

எதற்கு என்று கேட்கிறீர்களா? காரின் பின் இருக்கையில் இருந்த நாய் சூரியனின் அதிக வெப்பத்தால் தவிக்கிறது என்றுதான் அந்த இரண்டு பொலிஸ்காரர்களும் அப்படியொரு முடிவுக்கு வந்துள்ளனர்.

ஆனால் ஒரு ஆச்சரியம். காரின் பின் ஆசனத்தில் இருந்தது 4.50 பவுண்கள் மதிப்புள்ள நாய் பொம்மை ஆகும்.

குறித்த காரின் உரிமையாளரான 80 வயது முதியவரான ஹோர்டன் வில்லியம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்,


இரண்டு பொலிஸ்காரர்களும் ஒருவேளை முட்டாள்களாக இருப்பார்களோ? அந்தநாய் சந்தோசமாக எனது காரின் பின் பக்க ஆசனத்தில் தூங்கியது எனக் காமெடியாக கூறினார் உரிமையாளர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் எல்லாம் முடிந்த பின்னர் பொலிஸாரின் காரின் பின்பக்க ஆசனத்தில் எழுதப்பட்ட ஒரு துண்டை விட்டுச் சென்றுள்ளனர்.

அதில் இப்படித்தான் இருந்தது. நாய் வெயிலில் வாடுகிறது என நினைத்து உங்களது காரின் கதவை உடைத்துவிட்டோம் என்பதனைக் கவலையுடன். தெரிவித்துக்கொள்கிறோம்.

## அதிசய உலகம்...

# துணிவாக தீயணைக்கும் ரோபோ



தீயினால் விபத்திற்குள்ளாகும் பகுதிகள் தற்போது மனிதர்களின் நேரடியான நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு செயற்படும் போது மனிதனுக்கு ஏற்படும் தீங்குகளை தடுக்கும் பொருட்டும் துணிவாகவும் விரைவாகவும் தீயை அணைக்கும் பொருட்டும் நவீன ரோபோ கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோக்கள் தம்மில் பொருத்தப்பட்டுள்ள infrared கருவிமூலம் தீப்பிடிக்கும் இடங்களை உணர்ந்து கொள்கின்றன. பின் அந்த இடத்தை நோக்கி நகர்ந்து தம்முள் நிரப்பப்பட்டுள்ள நீர் மற்றும் காற்றைக் கொண்டு தீயை அணைக்கின்றன.

# இங்கிலாந்தில் ரோமானிய நாணயப் புதையல் கண்டெடுப்பு




இங்கிலாந்து நாட்டில் உணவுவிடுதி கட்டுமானப் பணிக்காக குழி தோண்டும் போது சுமார் 450 அடி ஆழத்தில் நாணயப் புதையல் கண்டுபிடிக்கப் பட்டது.


அதனைத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் சென்று அவற்றை கைப்பற்றி ஆய்வு மேற்கொண்டனர். இந்தப் புதையலில் 30ஆயிரம் வெள்ளி நாணயங்கள் இருந்தன.

மேலும் இவை 3ஆவது நூற்றாண்டு காலத்தைச்சேர்ந்த ரோமானிய நாணயங்கள் என்றும் புதையல் கண்டெடுக்கப்பட்ட இடம் குளியல் அறையாக இருந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியளர்கள் கூறுகிறார்கள்.

# பறக்கும் காரின் சோதனை ஓட்டம் வெற்றி







அமெரிக்க நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பறக்கும் கார் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக முடிந்துள்ளது. எனவே இந்தக் கார் விரைவில் விற்பனைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல விமான தயாரிப்பு நிறுவனம் டெரபியூஜியா, மசாசுசெட்ஸ் மாநிலம் வூபர்ன் நகரைத் தலைமையிடமாகக் கொண்டது.ரேஸ் கார்கள்,சிறிய ரக விமானங்கள், விமானப் பாகங்கள் ஆகியவற்றை தயாரித்து வருகிறது. தரையில் மட்டுமன்றி வானத்திலும் செல்லக்கூடிய காரை உருவாக்கும் ஆராய்ச்சியில் இந்நிறுவனம் 2006 ஆம் ஆண்டு ஈடுபட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் தயாரிப்புப் பணிகள் முடிந்த பின் பல கட்டமாக இதன் சோதனை நடந்து வந்தது. டிரான்சிஷன் என்று இந்தக் காருக்குப் பெயரிடப்பட்டது.இதை வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்ய அமெரிக்க தேசிய ஹைவே பாதுகாப்பு அமைப்பு கடந்த ஜீலையில் அனுமதியளித்தது. இதையடுத்த சோதனையோட்டம் அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்தில் உள்ள பிளாட்ஸ்பர்க் விமான நிலையத்தில் கடந்த 23 ஆம் திகதி நடத்தப்பட்டது.

டெரபியூஜியா நிறுவனத்தின் தலைமைச் சோதனை பைலட் பில் மிட்டீர் செலுத்திச் சென்றார். முதலில் தரையில் வழக்கமான கார்போல ஓடிச் சென்றது.

சிறிது நேரத்தில் கார் கதவுகள் போல இருந்த இறக்கைகள் இரு பக்கமும் விரிந்தன. மெல்ல உயரே எழும்பிய கார் 8 நிமிடத்திற்கு ஆயிரத்து 400 அடி உயரம் வரை பறந்து பத்திரமாகத் தரையிறங்கியது.

சோதனை வெற்றிகரமாக முடிந்திருப்பதாக டெரபியூஜியா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அன்னா டிட்ரிச் தெரிவித்துள்ளார். சோதனை ஓட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு தேவைப்படும் மாற்றங்கள் செய்யப்படும். அடுத்த ஆண்டுக்குள் சந்தைக்கு கொண்டு வர முயற்சி செய்து வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.கார் விலை ரூபா 1.42 கோடி. ஓடர் கொடுக்க விரும்புவர்கள் ரூபா 5 இலட்சம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 2 ஆசனங்கள் உள்ளன. ஓட, பறக்க அன்லெடட் பெற்றோல் போதும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு மீண்டும் கொலம்பிய நீதிமன்றில்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு அமெரிக்க நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக கொலம்பியா மாவட்ட மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிடப்பட்டுள்ளது.

படையினரால் கொல்லப்பட்டவர்களில் குடும்பத்தினரான காசிப்பிள்ளை மனோகரன், கலைச்செல்வன், ஜெயக்குமார் ஜயாத்துரை ஆகியோரின் சார்பில் சட்வாளர் புரூஸ் பெயன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் நட்டஈடு வழக்கு தொடுத்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதி மகிந்தவுக்கு இராஜதந்திர விலக்குரிமை உள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் பரிந்துரைத்ததன் அடிப்படையில் இந்த வழக்கை தம்மால் விசாரிக்க முடியாதிருப்பதாக கூறி கொலம்பியா மாவட்ட நீதிபதி கொலீன் கொல்லர் கொட்டெலி கடந்த பெப்ரவரி 29 ஆம் நாள் தள்ளுபடி செய்திருந்தார்.

எனினும் 30 நாட்களுக்கு தீர்ப்பு குறித்து மேல்முறையீடு செய்யும் வாய்ப்பின் அடிப்படையில் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராக பொலம்பியா மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டவாளர் புரூஸ் பெய்ன் கடந்த 29 ஆம் திகதி மேல்முறையீடு செய்துள்ளார்.

இந்த மேல்முறையீட்டு வழக்கை மூன்று நீதிபதிகளை கொண்ட அமர்வு மன்றம் விசாரிக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# சமய அறிவுப் போட்டியும் செயல்முறை போட்டியும்

வண்ணை- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடந்தோறும் நடத்திவரும் சைவசமய அறிவுப் பரீட்சை, செயல்முறைப் போட்டி என்பவற்றை இந்த வருடம் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் மேமாத இறுதியில் கோரப்பட்டு ஜூலை மாத முற்பகுதியில் தேர்வுகள் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கு நீதிநூல் ம்னனப்போட்டியும் தரம் 3 தொடக்கம் தரம் 13 மாணவர்களுக்கு சைவசமய அறிவுப்பரீட்சையும் கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய தொண்டுபடும் செயல்முறைப் போட்டிகள் மத்தியபிரிவு, மேற்பிரிவு என்னும் பிரிவுகளில் நடைபெறுமென சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சை செயலாளர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் முதலாம் தவணை காலப்பகுதியில் நடைபெற்று வந்த இப்பரீட்சையும் போட்டியும் இவ்வருடம் தொடக்கம் இரண்டாம் தவணை காலப்பகுதியில் நடைபெறவுள்ளது என பரீட்சை செயலகம் அறிவித்துள்ளது. (ஏ)

# பஞ்சாங்கம் பெற்றுக் கொள்ளலாம்

*நந்தன* தமிழ் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களம் கையடக்கப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இப் பஞ்சாங்கத்தில் புதுவருடப் பிறப்புத் தொடர்பான சுபநேரங்கள் , புதுவருடப் பலன்கள், மாத ரீதியான சுப நேர விபரங்கள், இந்துக்களின் விரதங்கள், இலங்கையில் உள்ள பிரதான ஆலயங்களின் வருடாந்த விழாக்கள் போன்ற பல அம்சங்கள் அடங்கியுள்ளன.

இலவசமாக விநியோகிக்கப்படும் இப்புதிய பஞ்சாங்கத்தைப் பெற விரும்புவோர் திணைக்களத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

தபால்மூலம் பெற விரும்புவோர் சுய முகவரி எழுதப்பட்டு முப்பது ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 25 x 17 செ.மீ அளவான கடித உறையை பணிப்பாளர் இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களம், இல 248 1/1 காலி வீதி, கொழும்பு 4 என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

கடித உறையை வைத்து அனுப்பும் வெளி உறையின் இடது பக்க மேல் மூலையில் பஞ்சாங்கம் - 2012 எனக் குறிப்பிடுதல் வேண்டும் என உதவிப்பணிப்பாளர் எம். சண்முகநாதன் அறிவித்துள்ளார். (ஏ)

# முதலை இழுத்துச்சென்ற மாணவி உயிரிழப்பு

(கொழும்பு)

அக்குரஸ்ஸ நில்வள கங்கையில் குளிக்கச் சென்ற 18 வயதான பாடசாலை மாணவியொருவர் முதலையொன்று இழுத்துச்சென்றதால் உயிரிழந்துள்ளார்.

சில் மணித்தியாலங்களின் பின் அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸார், அக்குரஸ்ஸ பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உதவியுடன் படகு மூலம் கிராமவாசிகள் தேடுதலை மேற்கொண்டனர்.

டிக்கோவிட்டவை சேர்ந்த நுவன்கிகா சத்ரணி என்பரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ-11)




★ 1782-தாய்லாந்து மன்னன் டாக்சின் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டான். முதலாம் ராமா மன்னனாக முடிசூடினான்.

★ 1814-நெப்போலியன் பொனபார்ட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டான்.

★ 1865-அமெரிக்க உள்நாட்டுப்போர் ரிச்மண்ட் நகரில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் கூட்டமைப்பின் இராணுவத்தினர் தமது கடைசி சமரை வேர்ஜீனியாவில் நடத்தினார்.

★ 1869-செலுலோயிட் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1896-1500 ஆண்டுகளாக ரோம் பேரரசர் முதலாம் தியோடோசியசினால் தடைசெய்யப்பட்டிருந்த ஒலிம்பிக் போட்டிகள் முதற்தடவையாக கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் ஆரம்பமாகின.

★ 1917-முதலாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா ஜெர்மனி மீது போரை அறிவித்தது.

★ 1919-மகாத்மா காந்தி பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தார்.

★ 1936-ஐக்கிய அமெரிக்கா, ஜோர்ஜியாவில் சுழற்காற்று தாக்கியதில் 203 பேர் உயிரிழந்தனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர் யூகொஸ்லாவியா மற்றும் கிரேக்கத்தை ஜேர்மனி முற்றுகையிட்டது

★ 1965-ஏளி பேட் (Early Bird) என்ற தொடர்பாடற் செய்மதி விண்ணில் ஏவப்பட்டது.

★ 1968-இண்டியானா மாநிலத்தில் இடம்பெற்ற இரட்டை குண்டு வெடிப்புகளில் 41 பேர் உயிரிழந்தனர் 150 பேர் காயமடைந்தனர்.

★ 1973-பயனியர் 11 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1994-ருவாண்டா மற்றும் புருண்டி ஜனாதிபதிகள் பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை தொடர்ந்து ருவாண்டாவில் இனப்படுகொலைகள் ஆரம்பமானது.

★ 1998-இந்தியாவைத் தாக்கக் கூடியதான நடுத்தர ஏவுகணைகளை பாகிஸ்தான் சோதித்தது.

★ 2005-குர்தியத் தலைவர் ஜலால் தலபானி ஈராக் ஜனாதிபதியானார்.

**பிறப்புக்கள்**

★ 1483-ரஃபாயெல், இத்தாலிய ஓவியர், கட்டடக் கலைஞர் (இ.1520)

★ 1815-மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தமிழறிஞர் (இ.1876)

★ 1911-பியோதர் லைனென், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1979)

★ 1920-எட்மண்ட் பிஷர், மருத்துத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்

★ 1928-ஜேம்ஸ் வாட்சன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1949-ஹோர்ஸ்ட் ஸ்டோர்மர், நோபல் பரிசு பெற்றர்

★ 1963-ரஃப்வேல் கோர்ரியா, ஈக்குடோர் நாட்டின் ஜனாதிபதி

**இறப்புக்கள்**

★ 1520-ரஃபாயெல், இத்தாலிய ஓவியர், கட்டடக்கலைஞர் (பி.1483)

★ 1961-ஜூல்ஸ் போர்டெட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1870)



★ 2011-தமிழ்த் திரைப்பட நடிகை சுஜாதாவின் நினைவு தினம்.

(1952)

# ஆசியாவின் "அதிசய"க்கனவு அழிந்து போகிறதா?

## அதல பாதாளத்திற்கு நாட்டை கொண்டு செல்கிறது கடன் சுமை!

ஆசியாவின் அதியமாக இலங்கையை மாற்றப்போவதாக அரசாங்கம் அடிக்கடி கூறிக் கொண்டிருக்கிறது. ஆனால், தற்கால நிகழ்வுகளும், பொருளா தார நிலைமையையும் அதற்கு நேர்மாறான நிலையிலேயே சென்று கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்தில் மத்தியவங்கி ஆளுநர் நாட்டின் பொருளாதாரம் உறுதியான நிலையில் இருப்பதாகச் சொல்கிறார். இன்னொரு பக்கத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவோ, ஐரோப்பாவுக்கு கடன்கொடுக்கும் காலம் விரைவில் வரும் என்கிறார். ஆனால், நடைமுறை யதார்த் தங்களோ எதிர்மாறான திசையில் இருக்கின்றன.

கடந்த இரண்டு, மூன்று வாரங்களாக அமெரிக்க டொலரின் மதிப்பு உயர்ந்து இலங்கை ரூபாவின் மதிப்பு சரிந்து வருகிறது. கிட்டத்தட்ட இந்த வருடத் தொடக்கத்தில் இருந்ததைவிட, டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு 18-20 ரூபாவினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிலை அடுத்தவாரம் மிகவும் மோசமான நிலையை எட்டலாம். ஏற்கனவே இதுபற்றி அச்சம் வெளியிடப்பட்டிருந்தது தான். ஓகஸ்ட் மாதம் அளவிலே டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு 130 ஆக சரியும் என்று பொருளியல் நிபுணர்களால் எதிர்வு கூறப்பட்டது. ஆனால், அதற்குள்ளாகவே சில வாரங்களிலேயே அந்த நிலையை எட்டிவிட்டது. இப்போது 131 ரூபாவையும் தாண்டிச் சென்றுகொண்டிருக்கிறது அமெரிக்க டொலர். இதன் காரணமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் அத்தனை பொருட்களினதும்

**இன்போ தமிழ்**

விலைகள் எகிறும் நிலைக்கு வந்துள்ளன.

டொலரைக்கொடுத்து வாங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அதிக பணத்தைக் கொடுக்கவேண்டிய நிலைக்கு இப்போது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். சாதாரண மக்களால் இதன் பொருளாதார தாக்கத்தை உடனடியாக உணரமுடியாது. ஆனால், ஒவ்வொரு பொருட்களை நுகரும் போதும் விலையேற்றத்தின் மூலம் அதை உணருவார்கள். நீண்ட நாட்களாக 110 ரூபாவுக்கும், 112 ரூபாவுக்கும் இடையில் ஏறி இறங்கிக்கொண்டிருந்த டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பை குறைக்கும் நடவடிக்கைக்குப் பிள்ளையார் சுழிபோட்டதே அரசாங்கம்தான்.

நாணய மதிப்பிறக்கத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம் என்று அதற்கு நியாயம் கூறியது அரசாங்கம், இப்போது அரசாங்கத்தினால் கூட இந்த மதிப்பிறக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. வங்கிகள் தம்மிடம் உள்ள வெளிநாட்டுக் கையிருப்பை விற்கத் தொடங்கியபோதும், இந்த வீழ்ச்சியில் மாற்றம் ஏற்படவில்லை. எப்போது வங்கிகள் வெளிநாட்டு நாணயத்தை விற்கின்றனவோ அந்த நேரத்தில் மட்டும் ரூபாவின் மதிப்பு சற்று உயர்கிறது. பின்னர் மீண்டும் பழையபடி வீழ்ச்சி காண்கிறது.

போருக்குப்பிந்திய அபிவிருத்தியை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பிலுள்ள அரசாங்கத்தினால், இந்த நாணய மதிப்பு வீழ்சியின் மூலம்



ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுக்க முடியாதுள்ளது. அரசாங்கம் நாணய மதிப்பிறக்கத்தை மேற்கொண்டபோது ஒரு காரணத்தைக் கூறியது நினைவிருக்கலாம். நாணய மதிப்பிறக்கத்தினால், வெளிநாட்டில் பணியாற்றுவோரிடம் இருந்து கிடைக்கும் அந்நியச் செலாவணியின் பெறுமதியை அதிகரிக்க முடியும் என்பதே அந்தக் காரணம். இதன் மூலம் வெளிநாட்டில் பணியாற்றுவோரிடம் இருந்து கிடைக்கும் அந்நியச் செலாவணி அதிகரிக்கும் என்பது உண்மையே. முன்னர் 100 டொலர் மூலம் 11ஆயிரத்து100 ரூபா பெற்றவர்கள் இப்போது 13 ஆயிரத்து 100 ரூபாவரை பெறக்கூடியநிலை ஏற்பட்டள்ளது. ஆனால், வெளிநாட்டு வேலை வாய்ப்பின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் வருவாயை விட இறக்குமதிக்காகச் செலவிடப்படும் பணமே அதிகம்.

இலங்கை இன்னமும் இறக்குமதியாகும் பொருட்களிலேயே தங்கியுள்ளது. ஏற்றுமதி வருவாயைவிட இறக்குமதிச்செலவே அதிகம். இப்படிப்பட்ட சூழலில் வெளிநாட்டிலிருந்து அதிகளவு அந்நிய செலாவணிகிடைத்தாலும் இறக்குமதிப்பொருட்களுக்காக செலவிடும் தொகை அதிகம் என்பதால், பொருளாதார நெருக்கடியே ஏற்படும். அதைவிட, நாட்டில் உள்ள எல்லாக்குடும் பங்களுமே, வெளிநாட்டு வருவாயைப் பெறுவதில்லை. ஆனால், எல்லாக்குடும் பங்களும் வெளிநாட்டு இறக்குமதிப்பொருட்களில்தான் தங்கியுள்ளன. அரிசிதவிர, கோதுமைமா, பருப்பு, சீனி உள்ளிட்ட அத்தனை அத்தியாவசியப் பொருட்களும் இறக்குமதிதான். எனவே, இந்த ரூபாவின் மதிப்புவீழ்ச்சி, நாட்டின் அத்தனை குடும்பங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தப்போகிறது. விலைவாசி உயர்ந்து வானத்தைதொடும். பணவீக்கம் அதிகரிக்கும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும்.

இந்நிலை சாதாரணமாக ஒரு நாட்டில் ஏற்படுவதுதான். அதிலும் நாட்டின் வரவு செலவுத்திட்டத்தில் பெரும்பகுதி வருமானத்தை கடன்களின் மூலம் நிரப்பும் இலங்கை போன்றதொரு நாட்டில் இது போன்றநிலை மிகமோசமான விளைவுகளை ஏற்படுத்தும். ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியானது, இலங்கையின் ஒவ்வொரு பொருளாதார செயற்பாட்டிலும் ஒவ்வொரு குடும்பங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் அதைவிட இலங்கையை ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற வெளிநாட்டுக்கடன் சுமையும் அதிகரிக்கும். வெளிநாடுகளிடம் வாங்கிக் குவிக்கப்பட்ட நீண்டகால, குறுங்காலக் கடன்களுக்கு அதிக வட்டியைக் கொடுக்கவேண்டியுள்ளதுடன், கடனை மீளத்திருப்பும் போது அதிகளவு நிதியைக் கொடுக்க வேண்டும்.

ஆக மொத்தத்தில் இது நாட்டை அதலபாதாளத்துக்கு கொண்டு சென்று கொண்டிருக்கிறது.

ஆனால், அரசாங்கமோ ஆசியாவின் அதிசயம் என்கிறது.


இந்தக்கட்டத்தில்கூட ஐரோப்பாவுக்கு கடன் கொடுக்கும் காலம் வெகுதொலைவில் இல்லையென்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச ஜோக் அடிக்கிறார்.

இதுபோன்ற பல கதைகள் போரின் போதும் கூறப்பட்டன. அவையெல்லாம் தெற்கிலுள்ள மக்களால் நம்பப்பட்டன. ஏனென்றால், பெரும்பாலான மக்களின் கண்களுக்கு அப்பால்தான் போர் நடந்தது. ஆனால், பொருளாதார விடயத்தில் யதார்த்தத்தை மறைக்கும் இப்படியான கதைகள் நீண்டகாலத்திற்கு நிலைக்காது.

ஏனென்றால், இதன் தாக்கத்தை ஒவ்வொருவரும் அனுபவிக்கும் நிலையை ரூபாவின் இந்த வீழ்ச்சி ஏற்படுத்தத் தவறாது.

# தமிழ் பாரம்பரிய அரங்கில் புதிய முயற்சி 2

நாடக அரங்க கல்லூரியின் தயாரிப்பில் றொபேட் தவநாதனின் இசையில் இந்த "கண்டனன் சீதையை" என்ற நாடகம் ஆற்றுகை செய்



யப்பட்டுள்ளது. இந்த நாடக முயற்சி அரங்கை "முறைப்படியாக்குதல்" என்கிற ஒரு படிமுறையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மிக நீண்ட காலத்திற்கு முன்னிருந்த பாரம்பரிய வடிவத்தை அதன் உள்ளார்ந்த கர்நாடக சங்கீத முறையை அடியொற்றி ஆக்கப்பட்டுள்ளது. இவ்வாறான முயற்சிகள் இந்தியா, ஜப்பான், சீனா போன்ற இடங்களில் பொருண்மை சாரா மூலங்களான மதம், ஐதீகம் சார்ந்த விடயங்களில் கலைப்படைப் புருவாக்கத்தை அடியொற்றி மாற்றங்களை முன்னேற்றத்தை உருவாக்கும் செயற்பாடுகள் நடந்திருக்கின்றன. அவ்வாறானதொரு முயற்சியாகவே இதனையும் கொள்ளுதல் வேண்டும். புதியதைப் புனைதல், ஏற்பட்ட மாற்றங்களைச் சீர்ப்படுத்தல் என்பதோடு தொடர்புபட்டதாகும். இந்நாடகத்திற்கும் அவ்வாறானதொரு முயற்சி நடந்திருக்கிறது. உண்மையில் எமக்கான நாடகமொழி உள்வாங்கப்பட்டுள்ளது. உதாரணமாக தசரதனுக்கு (பாலராசன்) ஏற்படும் அதிர்ச்சி பண்பாட்டின் படிமத்தில் இருந்து எடுக்கப்பட்ட "தள்ளாடிப் போதல்" என்ற செயல் மூலம் நடிப்பாக முன்னிறுத்தப்படுவது ஒரு சிறந்த அம்சமாகும். அவ்வாறே இராவணன் சூர்ப்பனகையின் சீதை பற்றிய வர்ணிப்பைக் கேட்டு "விறைத்து" போவது இராவணன் பாத்திர நடிப்பில் துலங்குகிறது. குழந்தை சண்முகலிங்கத்தின் நுட்பமான கலையாக்கல் முயற்சியாகவே இவற்றைக் கொள்ளலாம்.

றொபேட்டின் நீண்ட கர்நாடக சங்கீதத்தின் பயிற்றுவிப்பு பின்னர் சண்முகலிங்கத்தின் நாடகவாக்கல் மூலமாக உருப்பெறுகிறது. பெரும்பாலும் கேள்வி ஞானம், இசை ஞானம் கொண்ட இரண்டு பகுதியினரும் இங்கு நன்கு புடம் போடப்பட்டுள்ளனர். எல்லோருக்குமே எல்லாப் பாட்டுகளும் பாடவும் நடிக்கவும் தெரிந்து இருப்பது ஒரு இசை நாடக கல்வியின் ஒரு கற்கை நெறியாக அமைந்துள்ளது இதன் சிறப்பாகும். ஒரு வகையில் இதனை இசை நாடகம் என்பதற்கு அப்பால் 'பாட்டிசை நாடகம்' என்பதே அதிகம் அர்த்தம் பொருந்துவதாகக் கொள்ள முடியும். குழந்தை சண்முகலிங்கம் சொல்வது போல் இசையைப் பயிற்றுவிப்பதற்கு மிகுந்த பொறுமை தேவைப்படும். அந்தப் பொறுமை றொபேட்டிடம் இருந்தது என்கிறார். மேலும் அவர் குறிப்பிடுவது போல் இது பாரம்பரியத்தை உடைப்பதல்ல. மாறாகக் கட்டியெழுப்புவது இங்கு சங்கீதம்தான் மரபு: அந்த மரபைப் பேணுவது இதன்

## கண்டனன் சீதையை

மறுபக்கத்தில் பாரம்பரியம் என்பதனுள் மேடையும் உடுப்பும் மேற்கின் செல்வாக்கோடே பாரம்பரிய அரங்கிலும் காணப்படுகின்றது.

அதேபோல அன்று கிட்டப்பா பாடிய அதேமாதிரி சங்கீதத்தை இன்று உன்னிகிருஷ்ணன் பாடுவதில்லை. இங்கும் பல மாற்றங்கள் நடந்திருக்கின்றன என்றார். றொபேட் கூறுவது போல இந்த நாடகத்தில் வரும் வசனங்கள் என்பவை ஒரு பாட்டு முடிந்து இன்னொரு பாட்டு ஆரம்பிப்பதற்கான ஒரு இணைப்பாகவே இருக்கின்றன. உண்மையில் பாட்டினிடையே வரும் வசனம் என்பதும் ஒரு பாட்டைபோன்ற பண்புமிக்கதாய் விருத்தம்போல அமைந்திருப்பதைப் பொதுவாக கூத்துக்கள், காத்தவராயன், சிந்து மற்றும் ஏனைய இசை நாடகங்களில் காணலாம். அருணாச்சலக்கவிராயரின் "இராமநாடக கீர்த்தனைகளை" கொண்டே இந்நாடகம் ஆக்கப்பட்டுள்ளது.

எனினும் கவிராயரின் இராகங்கள் அதன் எழுத்துருவில் உள்ளபடி போடப்படவில்லை. அவை நாடகத்தின் தன்மைக்கு அமைந்ததான இராகங்களோடு போடப்பட்டுள்ளது. இங்கு பாட்டுத்தான் நாடகம் என்பதால் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு பாடல் பயிற்சிகளுக்கே ஒதுக்கப்பட்டது. நடிக்கின்ற நடிகர்களின் கருத்துப்படியும் இங்கு பாட்டுத்தான் நடிப்பை உரு வாக்கி கொடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சண்முகலிங்கத்தின் பாத்திர தெரிவு இங்கு மிகவும் முக்கியமானதாகும்.. பொதுவாக நெறியாளரே பாத்திரத்தை தெரிவார். ஆனால், நெறியாளர் நடிகரிடமே 'உங்களிற்கு விருப்பமான பாத்திரத்தை எடுங்கள்' என்ற நுட்பமூலம் இங்கு செய்யப்பட்டது. இது ஒரு நல்ல நுட்பமாகக் கொள்ள முடியும்.

இவரின் அரங்க அனுபவத்தின் வெளிப்பாடாக இதனைக் கொள்ளலாம்.

முறைப்படியாகுதலின் ஒரு வழிமுறையாக ஒலிவாங்கியை நோக்கி அல்லது மையப்படுத்தி அசையும் முறை மாற்றப்பட்டு மேடை வெளியில் தேவைக்கு அமைவாக பல்வேறு விதமான நிலைகள், அசைவுகள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்தது ஆர்மோனியத்தை நோக்கி அல்லது அருகில் நிற்கும் நிலைகள் மாற்றப்பட்டுத் தேவையான இடங்களில் பாத்திரங்கள் நிலை நிறுத்தப்பட்டன. அதேபோல கர்நாடக சங்கீதமும் நாடக நிலைப்படுத்தப்பட்டு ஆக்கப்பட்டிருக்கிறது.

றொபேட் கூறுவது போல இங்கு சங்கீத கச்சேரி போல் நீண்ட இராக ஆலாபனை, ஸ்வர விளையாட்டு, தனியாவர்த்தனம், குறைப்பு என்பன நாடகத்தில் தவிர்க்கப்படுகிறது. நடிப்பில் பாத்திரங்களின் நிலையை உருவாக்கல், உணர்ச்சி, பாத்திரத்தை கட்டியெழுப்பல் என்பன முக்கியமாக கவனிக்கப்பட்டன என்று சண்முகலிங்கம் குறிப்பிட்டார்.

(தொடரும்)

க.ரதிதரன்

# மிதிவெடிகள் அபாயம் நீங்க இன்னும் காலம் எடுக்கும்

## மிதிவெடி செ.நி.பணிப்பாளர் மொன்டி ரனதுங்க

இலங்கையில் நிலக் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் கண்ணிவெடி அபாயம் முழுமையாக நீங்குவதற்கு நீண்டகாலம் செல்லும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வுக்கான சர்வதேச தினத்தையொட்டி வவுனியாவில் நடைபெற்ற வைபத்தில் 2020 ஆம் ஆண்டில் இலங்கையை கண்ணிவெடி அபாயமற்ற நாடாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பகுதிகளில் 90 வீதமான இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு இடம்பெயர்ந்த 3 இலட்சம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தேசிய மிதிவெடி செயற்பாட்டு நிலைய பணிப்பாளர் மொன்டி ரனதுங்க தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் 1.5 மில்லியன் வெடி பொருட்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கடந்த 2002 ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் விடுதலைப்புலிகளினால் எத்தனை மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன என்பது பற்றிய விபரங்கள் தெரியாத காரணத்தினால் இந்த பிரதேசங்களில் உள்ள வெடிபொருட்களின் சரியான எண்ணிக்கையை அறிய முடியாதிருக்கின்றது.

இதனால் கண்ணிவெடி அகற்றும் பணி கடினமாகியிருக்கின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மிதிவெடிகளினால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைந்திருக்கின்றது.

கண்ணிவெடிகள், மிதிவெடிகளினால் ஏற்படும் அபாயம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மிதிவெடி அபாயக் கல்வி திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

எனினும் சந்தையில் பழைய இரும்புக்கு நல்ல விலை கிடைப்பதால் மிதிவெடி அபாயத்தையும் பொருட்படுத்தாமல் பலர் கண்ணிவெடிகள் நிறைந்த பிரதேசங்களில் இரும்பு சேகரிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக அதிகாரிகள் கவலை வெளியிடுகின்றனர்.

(அ-2)

# கழுத்துப்பட்டியணிந்த பயங்கரவாதம் இன்றும் செயற்பட்டு வருகிறது

(கொழும்பு)

இலங்கையின் விடுதலைப்புலிகளின் பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலும் சகல பயங்கரவாதங்களும் இன்னும் முடிவுக்கு வரவில்லை எனவும் கழுத்து பட்டியணிந்த வெள்ளைக்கார பயங்கரவாதம் இன்னும் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சில துறைகளில் சம்பிரதாயமான பயணத்தை மாற்றி கட்டமைப்பை மாற்றியமைக்க முயற்சிக்கும் போது வெள்ளைக் கழுத்துப் பட்டி மாபியாக்களிடம் இருந்து பாரிய அழுத்தங்கள் கொடுக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கொழும்பு ஜெய்க் ஹில்டன் விடுதியில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# கற்றல் உபகரணங்கள் ஆக்கப்போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் துரித கற்றல் செயற்றிட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரண ஆக்க வலய மட்டப்போட்டியானது எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

கோட்டமட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களை இப்போட்டியில் பங்கு பற்றுவதற்கு உரிய ஒழுங்கினை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# திவிநெகும புத்தாண்டு சந்தை திறந்து வைப்பு



(பூந்தோட்டம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட திவிநெகும புத்தாண்டு சந்தை வவுனியா பிரதேச செயலகத்தின் வவுனியா சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்தில் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கோடு சமுர்த்தி அதிகார சபையினால் ஏற்படுத்தப்பட்டு வரும் சுயதொழில் முயற்சியாளர்களின் ஊக்குவிப்பு செயற்பாடுகள் மற்றும் உள்ளூர் உற்பத்திகள் அதன் போது வைக்கப்பட்டிருந்தது.

இங்கு அமைக்கப்பட்டிருந்த சந்தையில் குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் அனைத்து வகையான மரக்கறிகள், புடைவைகள், மரக்கன்றுகள், சிற்றுண்டிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

அச்சந்தையினை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் திறந்து வைத்திருந்தார். இதன்போது வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரம் கைத்தொழில் வர்த்தக அமைச்சின் வவுனியா இணைப்பாளரும் நகர சபை உறுப்பினருமான பாரி மற்றும் சமுர்த்தி உதவி ஆணையாளர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(அ-2-266)

# வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிய போவதில்லை

## கருணாதிலக்க ஆவேசம்

(கொழும்பு)

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

எந்தக் காரணத்திற்காகவும் நாட்டின் இறைமை தொடர்பில் விட்டுக் கொடுப்புக்கள் செய்யப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளித்த காரணத்தினால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய நாட்டின் வெளிவிவகார சேவை நவீன மயப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் தமிழீழ விடுதலைப்புலிச் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியன தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். சகல தரப்பினரின் ஒத்துழைப்புடனே பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# நெளுக்குளத்தில் நடனக் கலைவிழா

ஆடற்செல்வன் அருந்தவநாயகம் சுஜேந்திராவின் நெறியாள்கையில் வவு/நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரியின் நெளுக்குளம், பூவரசன்குளம் பகுதிகளை சேர்ந்த மாணவர்கள் வழங்கும் நடன கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு வவு. நெளுக்குளம் கலைமகள் ம.வி. யின் பிரதான மண்டபத்தில் நுண்கலைக் கல்லூரி அதிபர் திருமதி சூரியாழினி வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலை விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினர்களாக வவு. தெற்கு வலயக்கல்வி பிரதி கல்விப் பணிப்பாளர் செல்வி க.கந்தையா, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி கிருபாகரி யோகராஜா, கலைமகள் ம.வி. அதிபர் எஸ் அ.அமிர்தலிங்கம் மற்றும் கௌரவ விருந்தினர்களாக தமிழ்மணி அகலிங்கன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், நெளுக் குளம் கிராம அலுவலர் எஸ்.ஆர். அமிர்த லிங்கம், கி.அ.ச., தலைவர் சுபாகரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(அ-266)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## தில்லையம்பலம் அரியரத்தினம்

திதி
அபரபக்க பிரதமை 07.04.2012

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 04.10.1959 | 20.03.2011 |

தில்லையம்பலம் அரியரத்தின (ம்) மே!
தாய்க்கு தலை மகனாய்
தந்தைக்கு துணை மகனாய்
சோதரற்க்கு உறு துணையாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
தரணியிலே எமது துயர் துடைத்து
தாங்கி நின்றவனே!
எம்மை மட்டுமல்ல உனது
குஞ்சுகளையும் தாயையும் தவிக்கவிட்டு
குறுக்கு வழியில் கூத்தனிடம் சென்று விட்டாய்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



(8093)

வடமராட்சி கிழக்கு,
வத்திராயன் தெற்கு,
தாளையடி.

தகவல்
குடும்பத்தினர்.

# வவுனியா பிரதேச செ.பிரிவில் கலாசார மத்திய நிலையம்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலாளர் பிரிவு தோறும் நிறுவப்பட்டுவரும் கலாசார மத்திய நிலையமும் அதனோடு இணைந்த கட்டடத் தொகுதிகளும் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிலும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கென வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் அரச ஊழியர் வீடமைப்பு திட்டத்தில் எட்டு பரப்பு காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அண்மையில் வவுனியாவிற்கு விஜயம் செய்த கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின அதிகாரிகள் அடங்கிய குழுவினர் குறிப்பிட்ட பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து காணியை பார்வையிட்டதுடன் விரைவில் கட்டட நிர்மாண வேலைகளை ஆரம்பிக்ககூடிய வகையில் நிதி ஒதுக்கீடுகளை விடுவிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மீள்குடியமர்வு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் ஒரு பகுதியாக குறித்த கலாசார மத்திய நிலையத்தை ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் நிர்மாணிப்பதற்கு முடிவு செய்யப்பட்டதாகவும் வவுனியா பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ-266)

# அரச சிறுவர் ஓவிய விழாவிற்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து இலங்கை கலைக்கழகத்தின் அரச ஓவியம் மற்றும் சிற்பக்குழுவின் ஒத்துழைப்புடன் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் அரச சிறுவர் ஓவிய விழாவிற்கு பொருத்தமானவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் விஜித கணுகல அறிவித்துள்ளார்.

சிறுவர் உலகில் சிந்தனைக் கலை என்ற தலைப்பில் இம்முறை ஓவியப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இரண்டு சுற்றுக்களாக மேற்படி ஓவியப் போட்டி நடத்தப்படவுள்ளது. முதலாவது சுற் றுக்கு கிடைக்கப் பெறும் ஆக்கங்களில் இரு ந்து ஒரு மாவட்டத்தில் இருந்து 150 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு முதலாவது சுற்றில் இருந்து இரண்டாவது சுற்றுக்கு தெரிவு செய்யப்படுவோருக்கு பங்குபற்றுதலுக்கான சான்றிதழ் வழங்கப்படும். திறந்த பிரிவு (16 - 18) என்ற அடிப்படையில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை தேசிய கலா பவனம், நெளும் பொக்குன மாவத்தை, கொழும்பு 07என்ற முகவரிக்கு சமர்ப்பிக்க முடியும்.

சிறுவர்கள் தாம் விரும்பிய கருப்பொருளில் விரும்பிய மொழிமூலம் ஓவியங்களை வரையலாம் என்பதுடன் ஓவியம் 18- 14 அங்குலத்தினை கொண்டிருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு ஆக்கத்தினை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஓவியத்தின் பின்புறத்தில் பெயர், பிறந்ததிகதி, 2012.04.30 ஆம் திகதி வயது, போட்டிப்பிரிவு ,சொந்த முகவரி, நிரந்தர வதிவிட மாவட்டம், தொலை பேசி இலக்கம் ஆகியவற்றை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதுவதுடன் குறித்த ஆக்கம் தமது சொந்த மானது என்பதையும் உறுதிப் படுத்தல் வேண்டும்.

இதேவேளை, வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து சம்பந்தப்பட்ட ஓவியப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் சிறுவர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கும் போது அவற்றை உரிய முகவரிக்கு அனுப்பி வைக்கக்கூடியதாக இருக்கும் என்று வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். மேலதிக தகவல்களை அவ் அவ் மாவட்டங்களிலுள்ள செயலகங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (அ-266)

# விசேட நிதி வழங்கும் திட்டத்தில் எம்மையும் இணையுங்கள்

## பல்கலை. மாணவர்கள் கோரிக்கை

(புளியம்பொக்கணை)

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு வடமாகாண ஆளுநரின் விசேட நிதி வழங்கும் திட்டத்தின் மூலம் கடந்த வருடம் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இவர்களுக்கான பகுதி நேரக் கொடுப்பனவு கடந்த 25 ஆம் திகதி வழங்கப்பட்டது.

இவர்களை போன்றே இன்னும் உதவி பெறவேண்டிய மாணவர்கள் பலர் பல்கலைக்கழகங்களில் உள்ளனர். அவர்களும் தங்களை இத்திட்டத்தில் உள்வாங்க வேண்டும் என கோரிக்கை விடுகின்றனர்.

பல்கலைக்கழக நலச் சேவையினூடாக தாம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (அ-263)

# சர்வதேச மிதிவெடி தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு


சர்வதேச மிதிவெடி தினமான நேற்று முன் தினம் தேசிய ரீதியிலான நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் மிதிவெடி செயற்பாட்டினூடாக அபிவிருத்தியை நோக்கி என்னும் கருப்பொருளில் நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

வடபகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் அனைத்து நிறுவனங்கள் மற்றும் இராணுவத்தின் மிதிவெடி அகற்றும் படையணியென்பன பங்கேற்றிருந்த இந் நிகழ்வில் வவு.மாவட்ட அ.அ.திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார்.

நிகழ்வில் சிறப்பம்சமாக இடம்பெற்ற மிதிவெடி அகற்றலிலான நாய்களின் செயற்பாடுகளும் இடம்பெற்றது. (அ-266)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி வேலும்மயிலும் (E.V.M)



ஈஸ்வரி வீதி, மயிலிட்டியை பிறப்பிடமாகவும், கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வேலும்மயிலும் அவர்கள் 31.03.2012 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இளையதம்பி- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், செல்லக்கண்டு - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் மதுரம் (மாம்பழம்) அவர்களின் அன்புக் கணவரும், மணிவண்ணன் (கனடா), மதிவண்ணன் (பிரான்ஸ்), மணிமாறன் (பிரான்ஸ்), மேனகா (தங்கச்சி), மதியழகன் (வவி), மதிரூபன் (ரூபன்), ஆகியோரின் அன்புத் தந்தையும் , மணிமாலா (கனடா), ரஜனி (பிரான்ஸ்), ஆகியோரின் மாமனாரும், சிவகாமி (ஐஸ்வர்யா,பிரான்ஸ்) இன் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 06.04.2012 வெள்ளிக்கிழமை மதியம் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கதிரவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

தகவல்
குடும்பத்தினர்
தொ.பே.0217904015
0773400970

(8105)





யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் முதலுதவி தொடர்பான கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியின் யாழ். மாவட்ட முன்னாள் ஆணையாளர் அருந்தவராசா கருத்துரை வழங்குவதையும் தீயணைப்பு தொடர்பாக விளக்கமளிப்பதையும் வித்தியாலய அதிபர் க.வாகீசன், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் இவ்வாண்டுக்கான உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் து. சுதர்சன், ச.சுபேசன் ஆகியோர் அருகில் நிற்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## தேசிய நாடக விழா

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை கலைக்கழகத்தின் அரச நாடகக் குழு வருடா வருடம் ஏற்பாடு செய்கின்ற தேசிய நாடக விழா இம்முறையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடக விழாவிற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கலா சார திணைக்களத்திற்கு கிடைக்கும் படி அனு ப்பி வைக்கப்படவேண்டும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்டோர் மேலதிக விபரங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரி. சாந்தகுமார் அறிவித்துள்ளார். (அ)

# கல்வியும் சுகாதாரமும் எனது இரு கண்கள்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலவசக்கல்வி மற்றும் சுகாதாரத் துறையை பாதுகாப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ள உலக சுகாதார தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்பொருட்டு போதுமான நிதி இந்த முறை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டு சபையின் 28 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அஞ்சல் தலையொன்றும் விசேட ஞாபகார்த்த அஞ்சல் உரையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

## செயலமர்வு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தரம் 6, 7 ஆகிய தரங்களில் சைவ நெறிப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் சைவ நெறிப்பாட ஆசிரிய ஆலோசகர்களுக்குமான செயலமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

தரம் 6, 7 ஆகிய வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களின் சைவநெறிப் பாடத்தில் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இச் செயலமர்வில் துறைசார்ந்த வளவாளர்கள் கருத்துக்களை வழங்கவுள்ளனர். (அ-3-15)

# வவுனியா தெற்கு வலயத்தின் தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயமட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தமிழ் மொழித்தினப்போட்டி முடிவுகளை வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டிகள் வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்திலும் வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**ஆக்கம் எழுத்து**

**பிரிவு-1**

பீ.விபீசாயினி (வவு/ பூந்தோட்டம் ம.வி), சி. நிதுஷா ( வவு/விபுலாநந்தாக் கல்லூரி), துசரனிக்கா (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி)

**கட்டுரை வரைதல்**

**பிரிவு-2**

அ.சரஞ்சியா (வவு./இலங்கை திருச்சபை தமிழ் ம.வி),உ.பிரியதர்சினி (வவு/தாலிக்குளம் அ.த.க. பாடசாலை), க.டிலக்ஷனா (வவு/ பூந்தோட்டம் ம.வி)

**பிரிவு-3**

நி.மிப்சா (வவு/அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தி), இ.சிந்து (பெரியகோமரசங்குளம் ம.வி), இ.திவாகரன் (வவு/ தாலிக்குளம் அ.த.க. பாடசாலை)

**பிரிவு-4**

இ.அப்ஷரா (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), நா.தனுசா (வவு/ இந்துக் கல்லூரி), அ.இர்சாத் (வவு/இலங்கை திருச்சபை தமிழ்.ம.வி)

**பிரிவு-5**

சி.மோகனவதனி (வவு/இந்துக் கல்லூரி), கோ. சரண்யா (வவு/நெளுக்குளம் கலைம கள் ம.வி), கெ. கிசாந்தி (வவு/ பூந்தோட்டம் ம.வி)

**இலக்கணப்போட்டி**

**பிரிவு-4**

சி.செள்மியா (வவு/ தமிழ் மத்திய ம.வி), க.யாழினி (வவு/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தி), பா.சுனியா (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**பிரிவு-05**

த.தரூபா ( வவு/ பூந்தோட்டம் ம.வி), ந.பவித்திரா (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி),க. நியாந்தினி (வவு/பாவற்குளம் கணேஸ்வரா ம.வி)

**திறனாய்வுப்போட்டி**

**பிரிவு-5**

இ.வினித்தா (வவு/ பெரியகோமரசங்குளம் ம.வி), க.ஏஞ்சலின் (வவு/ பூந்தோட்டம் ம.வி), ஏ.அஸ்லம் (வவு/ அல்மீன் முஸ்லிம் வித்தி)

**குறுநாடக ஆக்கம்**

**பிரிவு-4**

அ.மனூஜா (வவு/ விபுலாநந்தாக் கல்லூரி), எஸ். சஹினாஸ் (வவு/ வவுனியா முஸ்லிம் ம.வி), இ.தனுசியா (வவு/ பாவற்குளம் கணேஸ்வரா ம.வி)

**பிரிவு-5**

பூ.சுலக்ஷி (வவு/ விபுலாநந்தாக் கல்லூரி), வு.முஜிபா (வவு/ வவுனியா முஸ்லிம் ம.வி), பு.விஜயகுமார் (வவு/ பெரியகோமரசங்குளம்.ம.வி)

**கவிதை**

**பிரிவு-4**

கு. டியாந்தன் (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி), சு.கஜேந்திரா (வ/ இலங்கை திருச்சபை தமிழ். ம.வி), என். சஸ்மிதா (வவு/ வவுனியா முஸ்லிம் ம.வி)

**கவிதை**

**பிரிவு-5**

ந.பிரம்மியா (வவு/ தமிழ் மத்திய ம.வி), பா. அர்ச்சனா ( வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி), எவ். மபாசா (வவு/ வவுனியா முஸ்லிம் ம.வி)

**சிறுகதை**

**பிரிவு-4**

எவ். சத்ரா (வவு/ வவுனியா முஸ்லிம் ம.வி), கு. வித்தியா (வவு/இலங்கை திருச்சபை தமிழ்.ம.வி), க.பிரவீனா (வவு/ கந்தபுரம் வாணி வித்தி)

**பிரிவு-5**

சி. கிர்சாந்தி (வவு/பூவரசன் குளம் ம.வி), சி.டிலக்சனா (வவு/இலங்கை திருச்சபை தமிழ்.ம.வி), ச.தர்சினி (வவு/பாவற்குளம் கணேஸ்வரா ம.வி)

**வசிப்பு**

**பிரிவு1**

ஜே. சாரோன் (வவு/ பூந்தோட்டம் ம.வி), ஜ.காவியா (வவு/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தி), யோ.அபின்சன் (வவு/ இந்துக் கல்லூரி)

**பிரிவு- 2**

பே. மயூரி (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி), வா. வாரகி (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), சி. டிலக்சனா (வவு/ வீரபுரம் மணிவாசகர் வித்தி)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

**பிரிவு-1**

வ.லக்சிதா (வவு/பண்டாரிக்குளம் விபுலாநந்தாக் கல்லூரி), எம்.ஜசீத் (வவு/ வவுனியா முஸ்லிம் ம.வி), சி.பிபர்சன் (வ/கந்தபுரம் வாணி வித்தி),

**பேச்சு**

**பிரிவு-1**

சூ. பிரட்சகா (வவு/ பண்டாரிக்குளம் விபுலாநந்தாக் கல்லூரி),ர.ஆதித்தன் (வவு/ தமிழ் மத்திய மகா வித்தி), வி. அர்ச்சனா (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி)

**பிரிவு-2**

ச.துசிதா (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), மா. டிலோஜினி (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி), ச.மதுமிதன் (வவு/ பண்டாரிக்குளம் விபுலாநந்தாக் கல்லூரி),

**பிரிவு-3**

சி. விசாகி (வவு/ தமிழ் மத்திய மகா வித்தி), கூ.தாட்சாயினி (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி), பூ. பிரதிகா (வவு/செட்டிக்குளம் ம.வி)

**பிரிவு-4**

வி. டிலக்சனா (வவு/வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி). சி. பவதாரணி (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி), சி. மிதுர்சன் (வவு/ இந்துக் கல்லூரி)

**பிரிவு-5**

வி.விஜிதா (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி), சி. மேகலாதரன் (வவு/ தமிழ் மத்திய ம.வி), சி. சுரேகா (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**பாவோதல்**

**பிரிவு-1**

கு.சிந்தூரி (வவு/ தமிழ் மத்திய ம.வி), வா. வியாகினி (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), தி.டர்சிகா (வவு/பண்டாரிக்குளம் விபுலாநந்தாக் கல்லூரி)

**பிரிவு-2**

கு. நிர்மியா (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), மு.கிசோத்தமன் (வவு/ தமிழ் மத்திய ம.வி), கு.கோபிசாளினி (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி)

**பிரிவு- 3**

ஜீ. ஜெதுசன் (வவு/ தமிழ் மத்திய ம.வி), மு.அஜ்வினி (வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி), சோ. பிருதிவி ( வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி)

**பிரிவு-4**

இ.கேதுஜா வவு/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி), ஆ.தேனுஜா ( வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி), ம.கமலப்பிரியா ( வவு/ தாலிக்குளம் அ.த.க. பாடசாலை)

**பிரிவு- 5**

இ.சுகிர்தா (வவு/ பூவரசங்குளம் ம.வி), யோ. பிரபா (வவு/ தமிழ் மத்திய ம.வி) (அ-266)

(தொடரும்)

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்த மாக இருக்க வேண்டும்.

– கிரீஸ் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பெறுபேற்று வீழ்ச்சி கண்டோம் காரணத்தைக் கண்டோமா?

2011 டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வின் முடிபு வெளியாகியுள்ளது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில், யாழ்ப்பாண மாவட்டத்தின் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வீழ்ச்சி கண்டுள்ளதை அறிய முடிகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதைப் பகுப்பாய்வுகள் சுட்டி நிற்பதற்கு யுத்தத்தின் கொடூரமே அதற்குக் காரணம் என்று சான்றுபடுத்த முடியும்.

ஆனால், யாழ்ப்பாண மாவட்டத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சியடைவதற்கான காரணம் என்னவென்பதை கண்டறிவது கட்டாயமானதாகும்.

இது விடயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ். மாவட்டத்தில் இயங்கும் கல்வி வலயங்கள் மற்றும் கல்வி அபிவிருத்திக் குழு என்பன இந்த ஆய்வில் ஈடுபட வேண்டும்.

ஆய்வின் முடிபுகள் பகிரங்கப்படுத்தப்படுவதுடன், அவை சீராக்கப்படுவதும் கட்டாயமானதாகும்.

அதேவேளை, யாழ்ப்பாண மாவட்டம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏனைய மாவட்டங்களுக்கு விட்டுக்கொடுத்து இந்தளவு தூரம் வீழ்ச்சி கண்டதென்பதன் பின்னால்,

திட்டமிட்ட கல்விச் சீரழிப்புகள் உண்டென்றே எண்ணத் தோன்றுகிறது.

இதற்கு மேலாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற ஆசிரிய இடமாற்றத்தின் விளைவாக யாழ்ப்பாணக் கல்வி வீழ்ச்சி கண்டு விட்டதென்ற குற்றச்சாட்டுகளும்,

வலயக் கல்வி அலுவலகங்களில் நிலவும் வெற்றிடங்களை உடனுக்குடன் நிரப்பாமல் இழுத்தடிப்பது, வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் ஏற்படும்போது வருடக் கணக்கில் அந்தப் பதவியை அப்படியே வெறுமையாக வைத்திருப்பது மற்றும், வடக்கு மாகாண நிர்வாகம் எல்லாவற்றுக்குள்ளும் மூக்கை நுழைத்து கல்வி வலயங்களை அதிகார மற்ற அலுவலகங்களாக மாற்றியமை போன்றவற்றின் நேரடி விளைவுதான் இந்தக் கல்வி வீழ்ச்சிஎன்றகடுமையானவிமர்சனங்களும்உண்டு.

எதுவாயினும் எங்கள் அதிகாரிகள் வழமை போல் சலாம் போடுவதை நிறுத்தி உடனுக்குடன் ப்தில் கொடுக்கத் துணியவேண்டும்.

இல்லையேல் யாழ்ப்பாணத்தின் கல்வியை தூக்கி நிறுத்துவது முடியாத காரியமாகிவிடும். கவனம்.

# குருநகரில் புத்தவிகாரை அமைக்கும் பணி ஆரம்பம்

## இராணுவம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் இராணுவத்தினரால் புத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

குருநகர் கடற்கரை வீதியில் யாழ். மாநகர சபை வளாகத்துக்கு அருகாமையில் உள்ள மிகப் பழமையான அம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள அரச மரம் ஒன்றின் கீழ் இந்தப் புத்த விகாரை அமைக்கும் பணியை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் விகாரை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பலாலி படைத் தலைமையக ஊடகப் பேச்சாளர் மேஜர் மல்லவராச்சியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இராணுவத்தினர் புத்த விகாரை அமைக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை முற்றாக மறுத்ததோடு யாழ்.மாவட்டத்தில் நாக விகாரை மட்டுமே புத்தமதம் சார்பாகக்கட்டப்பட்ட ஆலயம்என்றும்வேறு எந்த இடத்திலும் புத்தவிகாரை அமைக்க இராணுவத்தினர் முயற்சிக்கவில்லை என்றும் கூறினார்.

இருப்பினும் இராணுவத்தினர் அந்த இடத்தில் படை முகாம் ஒன்று அமைத்து தங்கியுள்ளனர் எனவும் காவலரண்கள் ஏதாவது அங்கு அமைக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவத்தினர் மேற்குறிப்பிட்ட இடத்தில் புத்தவிகாரை அமைக்கும் பணியில்தான் ஈடுபட்டு வருகின்றனர் என யாழ்.மாநகர சபையின் எதிர்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி உறுதிபடத் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் சிவன்ஆலயத்தினுள்அத்துமீறிநுழைந்த படையினர் ஆலயத்தில் இருந்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததோடு ஆலயத்தை இடிக்கப்போவதாகஎச்சரிக்கை விடுத்ததும் குறிப்பிடத்தக்கது. (எ-6)

## பேச்சுத்திறன் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள 14 ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலைகள் இணைந்து வழங்குகின்ற தேனென இனிக்கும் மழலை மொழியிலான பேச்சுத்திறன் காணும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/ சன்மார்க்க வித்தியாலய மண்டபத்தில் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரும் யாழ்.பாலர் கல்விக்கழக தலைவருமான எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கோட்டக்கல்வி அதிகாரி திருமதி வ.சிவபாலன் கலந்து கொள்ளவுள்ளார். (அ)

## பௌர்ணமிதின நிகழ்வு

(கொழும்பு)

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியன இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் நினைவாலய மண்டபத்தில் மண்டப அறங்காவலர்களின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளதாக மன்றஅமைப்பாளர்சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (அ)

## மூன்று நாட்களுக்கு மின்சாரம் தடைப்படாது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இன்றும், நாளையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் மின்சாரம் தடைப்படாது என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

கிறிஸ்தவ மதத்தினரின் உயிர்ப்பு பெருவிழாவினை முன்னிட்டு தடையின்றி மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என மின்சார சபையின் வட பிராந்திய பொது முகாமையாளரிடம் யாழ்.அரச அதிபர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மின்சாரம் தடைப்படாது என மின்சார சபையின் வட பிராந்திய பொது முகாமையாளர் உறுதியளித்துள்ளார் என யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, உறுதியளிக்கப்பட்டதன்படி அனைத்துப் பிரதேசங்களிலும் மின்சாரம் தடையின்றி வழங்கப்படுவதை மின்சார சபையினர் உறுதி செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-6)

## முற்றோதல்

(யாழ்ப்பாணம)

நல்லையம்பதியில் பெரிய புராணம் முற்றோதல் இந்து சமய அபிவிருத்தி உத்தியோபத்தர்களின் அனுசரணையுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்திவரும் மாதாந்த பன்னிருதிருமுறை முற்றோதல் தற்பொழுது பங்குனி மாதம் முழுவதும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 4.30 மணி முதல் பன்னிரெண்டாந்திருமுறை பெரிய புராணம் முற்றோதல் தொடர்ந்து தினமும் நடைபெற்று வருவதாக மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (அ-2)



## வெள்ளி நற்சிந்தனை

66

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவழிபாடு இருவகையாக செய்யப்படுவது.ஒன்று இறைவன் உருவத்திருமேனியைக் கோயிலே கண்ணார கண்டு வழிபடுவது. மற்றது அகத்திலே இறை உருவை அகக் கண்ணால் கண்டு வழிபடுவது. இவ்வாறு வழிபடும் போது என்ன சொல்லி வழிபடுவது? எல்லோரும் தமக்கு தேவையானவற்றையே கேட்பர். சிலர் மௌன மொழியால் வழிபடுவர். சிலர் வாய்ச்சொல் கூறி வழிபடுவர். மணிவாசகர் தான் வழிபாடு செய்த விதத்தைப் பாடலிலே காட்சிப் படுத்திக் காட்டியுள்ளார். இறைவன் தோற்றத்தையும் இருப்பிடத்தையும் இயம்பி வழிபடும் முறைமையைக் கூறியுள்ளார்.

இறைவன் தோற்றத்தைக் கண்டவுடன் எங்கள் தலைவனே நினக்கு வணக்கம் எனக் கூறுகின்றார். அடுத்த அவருடைய எண்ணம் இறைவன் இருப்பிடத்திற்குச் செல்கின்றது. அதனால் விண்ணுலகத்திலுள்ள பதவிகளில் இருக்கும் எல்லாத் தேவர்களுக்கும் ஏறு போல்பவனே நினக்கு வணக்கம் எனக் கூறி வழிபடுகிறார். சிறப்பாக வானத்தவரவர் ஏறு போற்றி எனக் குறிப்பிட்டுள்ளார்.

அங்காங்கே விண்ணுலகில் வதியும் திருமால், பிரமன், இந்திரன் முதலியவர்களை இச்சொற்றொடரால் உள்ளடக்கியுள்ளார். வெவ்வேறு பதவிகளில் உள்ளவர்களுக்குகெல்லாம் உயர்ந்தவன் என்பதையும் இத்தொடர் விளக்கி நிற்கின்றது.

அடுத்து உமையம்மையோடு தோன்றும் நிலையை எண்ணிப் பார்க்கிறார். அந்த உமையம்மையைச் சிறப்பான தோற்றத்திலே காண்கிறார். பூங்கொம்பு போன்ற நுண்ணிய இடையுடைய உமையம்மை ஒரு கூறாக இருக்கும் அற்புதமான தோற்றம் இறைவ னோடு இணைந்த அந்த இறைவியின் கோலம் அவருடைய எண்ணத்தில் நிலைத்திருப்பதைச் சொற்களால் சித்திரமாக்கி வெளிப்படுத்துகிறார்.

மணிவாசகர் இறைவன் கோல அழகை வழிபடும் போது வெண்ணீற்றை யுடையவனே நினக்கு வணக்கம்! செம் மேனியையுடைய பெருமானே நினக்கு வணக்கம்! என்று சொல்லி வழி படுகிறார். அப்பர் இறைவன் கோல அழகைப் பாடும் போது பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறு என்று காட்சிப்படுத்தியுள்ளார்.

மணிவாசகர் வெண்ணீறு பூசிய இடங்களையும் மேனியின் வண்ணத்தையும் வேறு வேறாகப் பார்த்து வழி படுகின்றர். அதனால் அத்தகைய அழகிய கோலத்தோடு இறைவன் உறையும் தில்லைச் சிற்றம்பலத்தை காட்சிப் படுத்திக் காட்டுகின்றார். தில்லையிலே கூத்தாடும் இறைவன் கோலத் தை நேரில் கண்ணாற் கண்டு வழி படப் புண்ணியச் செய்திருக்க வேண்டும்.

ஆனால் மணிவாசகருடைய பாடலில் வரும் தில்லைச் சிற்றம்பலவ போற்றி என்ற தொடர் அதை நாம் அகக் கண்ணால் தரிசிக்க வைக் கின்றது. சிவலோகத்திலே ஆட்சி செய்பவனே நினக்கு வணக்கம் எல்லாவற்றிக்கும் மேலாக என்னை ஆளாக உடைய ஒப்பற்றவனே என்று சொல்லி வழிபடுகிறார். உலக வாழ்க்கையிலிருந்து விடுபட வேண்டுமாயின் உடலைக் களைய வேண்டும் என மணிவாசகர் எண்ணுகிறார். இதற்காகவே இறைவனை வழிபடுகிறார். இறைவன் அருளால் தான் உடம்பால் வாழும் உலகியல் வாழ்வை விட்டு விடலாம். உலக வாழ்வியலை விட இறையியல் வாழ்வே நிரந்தரமானது. எனவே அதற்காக வழிபாடு செய் கிறார்.

*"எம்பிரான் போற்றி வானத்தவ*
*ரவர் ஏறு போற்றி*
*கொம்பரார் மருங்கல் மங்கை*
*கூற வெண்ணீற போற்றி*
*செம்பிரான் போற்றி தில்லைத்*
*திருச்சிற்றம்பலவ போற்றி*
*உம்பரா போற்றி என்னை*
*ஆளுடையொருவ போற்றி"*

# சீனாவை தாக்குவதற்காக அவுஸில் முகாமிட்டுள்ள அமெரிக்கப்படைகள்

**சர்வதேச கடல் வழி வர்த்தகத்தில் முக்கிய பங்காற்றும் இந்தியப் பெருங்கடல், பசுபிக் பெருங்கடல் மற்றும் திமோர் கடற்பரப்பை எளிதில் எட்டக்கூடிய வகையில் டார்வின் துறைமுகம் அமைந்திருப்பது சிறப்புக்குரியது.**

**தற்போது 200 அமெரிக்க கடற்படையினர் அவுஸ்திரேலியாவுக்கு வருகை தந்துள்ளனர். இது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் 2500 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாக அவுஸ்திரேலியாவுக்கான அமெரிக்க தூதர் ஜெப்ரி ப்ளீச் தெரிவித்துள்ளார்.**




அவுஸ்திரேலியாவின் வடபகுதி துறைமுகமான டார்வின் நகருக்கு வருகை புரிந்த 200 அமெரிக்க வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துரைக்கையில்,

சீனாவை தாக்குவதற்காக அவுஸ்திரேலியாவில் முதன் முறையாக அமெரிக்க படையினர் முகாமிட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்தாண்டு மேற்கொண்ட பயணத்தின் போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் படி முதற்கட்டமாக வடக்கு அவுஸ்திரேலியாவின் டார்வின் நகரில் 200 அமெரிக்க படைகள் முகாமிட்டுள்ளன.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமைதியையும் நிலைத்தன்மையையும் உருவாக்க அமெரிக்கா தொடர்ந்து பாடுபடும்.

தற்போது டார்வின் துறைமுகத்தில் அமெரிக்காவின் போர்க்கப்பல் நிறுத்தப்பட்டுள்ளதால் இதன் மூலம் இந்தியப் பெருங்கடல் பசுபிக் பெருங்கடல் மற்றும் திமோர் கடற்பரப்பை எளிதில் அமெரிக்க போர்க் கப்பல் சென்றடையும்.

டார்வின் துறைமுகத்தை தொடர்ந்து அடுத்து கோக்கோஸ் மற்றும் கிறிஸ்மஸ் தீவுகளிலும் டேரா அடிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இதன்மூலமாக சீனாவை அடுத்த கட்டமாக நெருக்கவும் வாய்ப்பிருக்கின்றது.

தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய 3 பெரிய நாடுகள் ஓரணியில் நிற்கின்றன.

இலங்கையும் கூட 2006 இல் அமெரிக்காவுடனான இராணுவ ஒப்பந்தப்படி போர் ஒன்று நிகழ்ந்தால் அது அமெரிக்கா பக்கம் தான் நிற்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டிருக்கின்றது என அவர் தெரிவித்தார். (அ-2)

## ஆப்கானில் தற்கொலை தாக்குதல் 10 பேர் உடல் சிதறிப்பலி; 26 பேர் காயம்

வடக்கு ஆப்கானிஸ்தானிலுள்ள மாகாணம் ஒன்றில் நேற்று முன்தினம் மதியம்தற்கொலைப்படையினர் நடத்திய தாக்குதலில் 10 பேர் உடல் சிதறி பலியாகினர். மேலும் 26 பேர் காயமடைந்தனர் என ஆப்கானிஸ்தானிய அதிகாரிகள் தரப்பு தெரிவித்துள்ளது.

பர்யாப் மாகாணத் தலைநகர் மைமணாவில்மனித வெடிகுண்டுடன் ஒருவன் வெடிகுண்டுகளை கட்டியபடி மோட்டார் சைக்களில் வந்து தன்னைத் தானே வெடிக்கச் செய்துள்ளான். இதில் 4 பொலிஸ் அதிகாரிகள் , இரு குழந்தைகள், இரண்டு பெண்கள் உட்பட 10 பேர் உடல் சிதறி பலியாயினர். காயமடைந்த 26 பேரும் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் யாரை குறிவைத்து நடத்தப்பட்டது என்பது தெரியவில்லை. ஆப்கானிஸ்தானில் இந்த ஆண்டு நேட்டோ படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இதுவரை 96 வீரர்கள் உயிரிழந்தனர். என்றும் அதில் 56 வீரர்கள் அமெரிக்க இராணுவத்தை சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

## சோமாலிய பிரதமர் மயிரிழையில் உயிர் தப்பினார்



சோமாலியாவில் பெண் ஒருவர் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் அந்நாட்டு பிரதமர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இந்த தாக்குதலில் ஒலிம்பிக் குழு தலைவர் மற்றும் கால்பந்து சங்கத் தலைவர் ஆகியோர் பலியாகினர். சோமாலியாவின் தலைநகர் மொகாதிசு நகரில் அந்நாட்டின் சட்லைட் டி.வி நெட்வேர்க்கின் முதலாமாண்டு விழா நடந்தது.

இதில் அந்நாட்டு பிரதமர் மற்றும் விளையாட்டுத்துறையை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அப்போது திடீரென பெண் ஒருவர் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தினார். இதில் பிரதமர் அபித்வெலி முகமது அலி காயமின்றி உயிர்தப்பினார். எனினும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒலிம்பிக் குழு தலைவர் ஏடன் யாப்ரோ வில்லிஸ் மற்றும் சோமாலியா கால்பந்து சங்கத்தின் தலைவர் முகமது நௌர் ஆகியோர் பலியாயினர்.

பலர் காயமடைந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இந்த தாக்குதல்களுக்கு சோமாலியாவின் உள்நாட்டுப்போரினை நடத்தி வரும் அல்ஷெபா என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றிருப்பதாக அச்செய்திகளில் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## அணுஆயுதம் குறித்து திட்டவட்டமான உறுதியினை ஈரான் வழங்க வேண்டும்

### ஹிலாரி தெரிவிப்பு

அணு ஆயுத திட்டம் குறித்து திட்டவட்டமான உறுதியினை ஈரான் வழங்க வேண்டும் என அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி,சீனா ஆகிய நாடுகளுடன் இம்மாதம் ஈரான் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இப்பேச்சுவார்த்தையின் மூலம் அணு ஆயுத தயாரிப்பு குறித்த பிரச்சினையை தீர்த்துக் கொள்ள ஒரு வாய்ப்பு ஈரானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாங்கள் மிகவும் திட்டவட்டமான உறுதி மொழிகளை ஈரானிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம். அணு ஆயுத திட்டம் குறித்து உண்மையை ஒளிவு மறைவின்றி ஈரான் மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஈரான் சர்வதேச கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் ஈரானுக்கு தேவையான அழுத்தங்களையும் விரிவான தடைகளையும் நாங்கள் அமுல் படுத்துவோம். இதன்மூலம் ஈரானை தனிமைப்படுத்தலாம். நாங்கள் கொடுத்து வந்த தொடர்ந்த அழுத்தம் தான் இன்று ஈரானை பேச்சுவார்த்தைக்கு இணங்க வைத்துள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் தேவையான நடவடிக்கைகளுக்கான திட்டம் தீட்டப்படும் . அதன் மூலம் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும். ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் எடுப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஒபாமா நிர்வாகம் எச்சரித்துள்ளது. அதற்குப் பதில் பொருளாதார நெருக்கடிகளை கொடுப்பது என அமெரிக்கா முடிவு செய்துள்ளது என்று தெரிவித்தார். (அ-2)

# உடனடியாக வெளியேற வேண்டும்; இந்தியாவிற்கு சீனா கடும் எச்சரிக்கை

(பீஜிங்)

தென் சீனக்கடல் பகுதியில் இருந்து இந்தியா உடனடியாக வெளியேற வேண்டும். இல்லையேல் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டி வரும் என இந்தியாவிற்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. சீனாவின் தென்கடல் பகுதியில் கச்சா எண்ணெய் எடுக்க இந்தியாவிற்கு கடந்த ஆண்டு நடந்த ஆசியான் உச்சி மாநாட்டின் போது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து இந்தியாவின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் நிறுவனம் அங்கு கச்சா எடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் இதற்கு சீனா கடும் ஆட்சேபமும் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கம்போடியாவில் ஆசியான் நாடுகளின் அரசியல் விவகாரம் தொடர்பாக நடந்த மாநாடு நிறைவுற்றது.


இதனையொட்டி தென்சீனா தேசிய இன்ஸ்டிடியூட் தலைவர் ஷ் சிஹுன் கூறுகையில்,

இந்தியாவுடன் சீனா எந்த வகையிலும் சர்வதேச கடல் பகுதி ஒப்பந்தம் மேற்கொள்ளவில்லை. இங்கு இந்திய எண்ணெய் நிறுவனம் கச்சா எண்ணெய் எடுக்க தார்மீக உரிமை இல்லை. இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் நெருக்கடி ஏற்படும்.

இப்பகுதியில் 40 சதவீத கச்சா எண்ணெய் எடுப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

உடனடியாக இந்தியா தென் கடல் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும். இல்லையெனில் கடும் விளைவுகளை சந்திக்க நேரும். இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்த இந்தியாவும் சீனாவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சீனாவின் தேச நலன்களை கருத்தில் கொண்டு இந்த பகுதியில் உள்ள தீவுகளை சீன அரசாங்கம் விட்டுக்கொடுக்காது என்றார்.

சர்ச்சைக்குரிய தென்கடல் பகுதியில் 52 தீவுகள் உள்ளது. இதில் 7 தீவுகள் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் இந்த பகுதியில் 90 சதவீத பகுதிகளை சீனா



உரிமை கொண்டாடுகின்றது.

வியட் நாம் கட்டுப்பாட்டில் 40 தீவுகளும் பிலிப்பைன்ஸ் கட்டுப்பாட்டில் 9 தீவுகளும் மலேசிய காட்டுப்பாட்டில் 5 தீவுகளும் தைவான் கட்டுப்பாட்டில் ஒரு தீவும் உள்ளது. (அ-2)

# டில்லி 8 விக்கெட்டுகளால் கொல்கத்தாவை வென்றது

(கொல்கத்தா)

5 ஆவது ஐ.பி.எல் இருபது-20 ஓவர் போட்டியின் 2-வது லீக் ஆட்டத்தில் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் – ஷேவாக் தலைமையிலான் டில்லி டேர்டேவில்ஸ் அணிகள் நேற்று மோதின.

இப் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று இரவு 8 மணிக்கு தொடங்குவதாக இருந்தது.

ஆனால் போட்டி தொடங்குவதற்கு முன்னமே மழை பெய்தது. எனவே மழையால் போட்டி தொடங்குவதற்கு தாமதமான நிலை ஏற்பட்டதால் 20 ஓவர்களை 12 ஓவர்களாக குறைத்து விளையாட முடிபு செய்யப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி டேர்டேவில்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் ஆடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 97 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் 98 ஓட்டங்களை எடுத்தால் வெற்ற என்ற இலக்குடன் களமிறங்கிய டில்லி அணி 11.1 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 100 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இத் தொடரில் இன்று மும்பையில் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் மும்பை - புனே அணிகளும் இரவு 8 மணிக்கு ஜெய்பூரில் நடைபெறும் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதவுள்ளன.

## அமெரிக்காவின் ...

அமெரிக்காவின் நோக்கமானது இனப் பிரச்சினையை நிலைத்திருக்கவும் தீவிரப் படுத்தவும் செய்வதாகவும். இதன் மூலம் அது தீவில் கால் பதிக்கவும் தனது தளம் ஒன்றை திருகோணமலையில் நிறுவவும் முடியும். அமெரிக்க நிர்வாகமானது இப்பிராந்தியத்தில் தந்திரேபாய மற்றும் பூகோள நலன்களைக் கொண்டுள்ளது.

திருகோணமலையில இயற்கைத் துறை முகத்தை கொண்டுள்ள இலங்கையானது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது.அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கமானது படிப்படியாக இந்த நாட்டில் ஊடுருவி, அதை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதாகும் என பிரபாகரன் அச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் டார்வின் நகரில் அமெரிக்கப் படையினர் அண்மையில் தரையிறக்கப்பட்டமையானது ஆசிய-பசுபிக்கில் அமெரிக்க விஸ்தரிப்பு கொள்கையின் பெரும் பங்காகும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார்.

அப் பகுதியில் அமெரிக்க துருப்பினரின் எண்ணிக்கை எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்கும் எனக் கூறிய அவர், அமெரிக்க படையினர் வழங்கப்பட்டுள்ள 2014 ஆம் ஆண்டு காலத்திற்கு பின்னரும் அங்கு நிச்சயமாக நிலைகொண்டிருப்பர் என்றார். (எ-11)

## இலங்கை வரும்...

தமிழகத்தின் ஆளும் கட்சியான அதிமுகவுக்கு அழைப்பு அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும் இக் குழுவில் அக் கட்சி இணைந்து கொள்ளுமா என்பது குறித்து எதுவும் தெரியவில்லை.

அத்துடன் மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு அனுப்பப் படவில்லையாம்.இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா கூறுகையில், இது தொடர்பாக தங்களுக்கு எந்தவிதமான தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனக் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழர் பகுதியில் நிலவும் சூழ்நிலைகளை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேரில் சென்று பார்வையிட ஏற்பாடு செய்யப்படும் என நாடாளுமன்றத்தில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா ஆகியோர் தெரிவித்ததன் தொடர்ச்சியாக, சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்வரும் 16-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றது.(ஏ)

# கொழும்பு டெஸ்ட்: இங்கிலாந்து வலுவான அடித்தளம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்றும் இங்கிலாந்து அணி அதிரடியாக விளையாடியது.


இலங்கையில் நடைபெறும் இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


இதனையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆரம்பமா னது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங் கை அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

இலங்கை அணி முதல்நாள் ஆட்டநேர முடிபில் 90 ஓவர்களிலில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 38 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி நிதானமாக விளையாடினாலும் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கியது. இறுதியில் இலங்கை அணி 111.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.





பதிலெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணி அதிரடியாக ஆடி வலுவான அடித் தளம் அமைத்தது என்றே சொல்ல வேண்டும்.

இங்கிலாந்து சார்பாக ஸ்ரொரஸ் 61, குக் 94, திரோட் 64 மற்றும் பீற்றர்சன் 151 ஓட்டங்களையும் பெற்று வலுச் சேர்க்க இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 460 ஓட்டங்களைப் பெற்றது.

ஹேரத் 6 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

இதனையடுத்து 185 ஓட்டங்கள் பின்னிலையில் தனது 2-வது இன்னிங்ஸை ஆட களமிறங்கிய இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான பிரசாத் மற்றும் திரிமன்னே ஆகியோர் ஓட்டமேதும் பெறாமல் களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாளாகும்.



# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண...

தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக பிரதான கட்சிகள் வட பகுதிக்குச் செல்ல வேண்டும். புலம்பெயர் தமிழர்கள் வடிவமைக்கும் போலிச் சித்திரங்களை வடபகுதி மக்களாலேயே பொய்ப்பிக்க முடியும்.

தேசிய பட்டியல் மூலம் வட பிரதேசத்திற்கு அதிக இடம் ஒதுக்கப்படல் வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்காக வட பகுதி மக்களை தேசிய அரசியல் கட்சிகளின் ஊடாக அரசியலில் பிரவேசிக்கச் செய்தல் வேண்டும்.

தமிழ் மக்கள் சார்பாக பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் என்பன சர்வதேசத்திற்கு பொய்யான சித்திரம் ஒன்றை வடிவமைத்துக் காட்டுகின்றன.

இத்தகைய போலிப் பரப்புரைகளை வட பகுதியில் வாழும் மக்களால் மாத்திரமே முறியடிக்க முடியும்.

அதற்காக தேசிய அரசியல் கட்சிகள் சார்பாக அவர்கள் அரசியலில் பிரவேசிக்க இடமளிக்கப்பட வேண்டும்.

வடக்கிலே அரசாங்கம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை தற்போது நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத்தகைய அபிவிருத்தி திட்டங்கள் தற்போதும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இலாபம் தேடி வருகின்றது.

தமிழ் மக்கள் போரை விரும்பவில்லை. சமாதானம் நிலைநாட்டப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன வட பகுதி மக்களிடம் செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது.

இது குறித்து நாட்டின் மீது பற்றும் அன்பும் கொண்ட அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். இதனூடாக சர்வதேச ரீதியில் நாட்டிற்கு எதிராக போலிப் பரப்புரைகளை மேற்கொண்டு வருவோரின் முயற்சிகளை செயலிழக்கச் செய்ய முடியும்.

தேசிய பட்டியல் மூலம் உறுப்பினர்களை நியமிக்கும்போது வட பிரதேசத்திற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். இதன்மூலம் தேசிய பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு காணமுடியும் என கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# விசாரணையை...

பின்னர் அவ் அமைப்பின் செயலாளர் ராஜேஸ் ரீகாக்னா, இலங்கை தூதரகத்திற்கு சென்று தங்களது கோரிக்கை மனுவினைக் கையளித்தார். (எ-11)

# தவறுகளை திருத்திக் கொண்டால்...

விமர்சிப்பவர்களையும் மாற்றுக் கருத்துக்களை உடையவர்களை விசேட சட்டங்களை பயன்படுத்தி தண்டிப்பதும் தேசத் துரோகிகள் என்று வர்ணிப்பதும் யதார்த்தமான போக்குடையதாக அமையாது. இதனால் நாடு மீண்டும் அழிவுகளின் அடிமைத்தனத்திற்கே செல்லும். எனவே அரசாங்கம் உணர்வுகளுக்கு அடிபணியாது புத்திக்கு வேலை கொடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாஸ்கா பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற விசேட நிகழ்வின்போதே கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரேல் மக்களை விடுவித்து புண்ணிய தேசத்திற்கு அம்மக்களை இறைவன் கொண்டு சென்றார். இதனால் உள்ளார்ந்த மாற்றத்திற்கு இஸ்ரேல் சமூகம் பரிமாணம் அடைந்தது. இதற்கு இறைவனின் ஆசீர்வாதம் காணப்பட்டது.

சுதந்திரம், சமாதானம் என்பவை ஒரு சமூகத்திற்கு முக்கியமான விடயங்களாகும். ஆனால், மனிதர்கள் நன்மைகளை விட தீமைகளுக்கு விரைவில் நகர்ந்து விடுகின்றனர்.

இது மானிட குணாதிசயங்களாகும். எனவே தவறு செய்வது மனித இயல்பு. அதனை திருத்திக் கொண்டு அந்த நிலையிலிருந்து விடுதலையடைவது முக்கியமான செயற்பாடாகும்.

கடந்த முப்பதாண்டு கால யுத்தத்தில் தேசியத்துவத்திற்கும் சுயநலத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து இலங்கை சிறைப்பட்டிருந்தது.

எனவே சிங்களம் என்பதற்காக ஏனைய சமூகங்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் ஏற்றுக் கொள்ள முடியாமல் போன சூழல்தான் காணப்பட்டது. தற்போது அந்நிலைமை மாற்றமடைந்திருக்க வேண்டும். ஏனெனில் யுத்தம் முடிபடைந்து விட்டது. இனி அனைத்து இனங்களும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ வேண்டும். இதற்கான மாற்றங்களையும் தேவைகளையும் அரசியல் தலைமைகள் பூரணப்படுத்த வேண்டும் என்றார்.

எனவே அரசாங்கம் உணர்வுகளுக்கு கட்டுப்படாது யதார்த்தமானதும் தார்மீகமானதுமான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அடிப்படை சிந்தனையில் முழு அளவிலான மாற்றம் ஏற்படாது விட்டால் நாடு மீண்டும் அழிவினையே எதிர்கொள்ளும். அழிவை நோக்கிச் செல்வதா? விடுதலையை நோக்கிப் போவதா? என்பதை அரசும் சம்பந்தப்பட்டவர்களும் சிந்திக்க வேண்டும் என மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். (எ-11)

# அமைச்சர் டக்ளஸின்..!..

இடம்பெற்றது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றிக் கொண்டிருக்கையிலேயே இந்த வாய்த்தர்க்கம் எழுந்தது.

இரு தரப்புகளும் வார்த்தைகளால் திட்டிக் கொண்டதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் வட மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அதில் காணப்படுகின்ற வெற்றி தொடர்பிலும் இங்கு சவால்கள் விடுக்கப்பட்டன. வட மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நிச்சயமாக நடத்தவிருக்கிறது. அந்த நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தைக் காட்டுங்கள் பார்ப்போம் என அமைச்சர் டக்ளஸ் கூறிய அதேநேரம், தேர்தலை நடத்துங்கள் பார்ப்போம் என கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒருமித்துக் கூறினர்.

இதவேளை கூட்டமைப்பின் தலைவர் கண்ணாடி கூட்டுக்குள் இருந்து கொண்டு கல் எறிகிறார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார். எனினும் கூட்டமைப்பின் தலைவர் சம்பதன் எம்.பி. அமைதியாகவே அமர்ந்திருந்தார்.


**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ். றோட், இணுவில்.

A/L 2014 கலை, வர்த்தகப் பிரிவு

மீண்டும் புதிய பிரிவு நாளை ஆரம்பம்

07.04.2012 சனி 8 am

யாழ் நகரில் : கலைப்பிரிவு 8 am, வர்த்தகப்பிரிவு 9 am

இணுவிலில்: கலைப்பிரிவு 8 am, வர்த்தகப்பிரிவு 2 pm

உங்கள் அனுமதிகளை விரும்பிய இடத்தில் பெற்றுக் கொள்ளவும்

Note: யாழ்.நகரில் பொருளியற் கல்லூரிக்கு வரும் மாணவர் கவனத்திற்கு; எமது நிறுவனத்தை ஒத்த பெயரில் எமது நிறுவனத்திற்கு அருகில் மாணவர்களை ஏமாற்றும் வகையில் போலி நிறுவனம் ஒன்று இருக்கிறது. நீங்கள் அதை அவதானித்து வரவும். ❁ எங்கள் ஆசிரியர்கள் அங்கு கற்பிப்பது இல்லை என்பதை அறியத் தருகின்றோம். (C-6283)

**DCM** யாழ் நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

கணக்கீடு : A.P. பகீரதன் B.B.A(FM Spl.)

A/L 2013

சொத்து முடிவு செய்தல்

Sat, Sun 10 - 11

ஆரம்பம்: 07.04.2012 சனி 10 மணி (C-6262)

**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2014

கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்

புதிய அனுமதிகள் இன்று முதல் (C-6280)

ஆரம்பம் : ஏப்ரல் - 07 சனி காலை 8.00 மணி

**CCA உடுப்பிட்டி கல்வி நிலையம்**

VVT றோட் உடுப்பிட்டி

G.C.E. O/L

DAY வகுப்புக்கள்

ஆரம்பம் :07.04.2012

சனி காலை 8.00 மணிக்கு

– நிர்வாகம் (8109)

**அனைவருக்கும் இன்ரநெற்**

இன் NALIN

Mega Sale 3100/= இலிருந்து

மிகக் குறைந்த விலையில் அதிவேக

HUAWEI Multi Dongle (E173, E177), ZTE Dongle 7.2, 14.2 வேக அளவுகளில் உத்தரவாதத்துடன் (Warranty)

Tel: 021 222 0838, 0777 667975, 365 Luxan Plaza, Kasthuriar Road, Jaffna.

Tel: 021 222 1121, 1166, 0777 667974, No.195/2, Palaly Road, Parameswara Junction, Jaffna.

**வீடும் காணியும் விற்பனைக்கு**

கச்சேரி கிழக்கில் நாலு அறையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:-

077-56-306-48 (8114)

**புதிய பொருளியல் கல்லூரி**

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர் (பெருமாள் கோவில் அருகில்)

A/L 2014 கலை, வர்த்தகப் பிரிவு

புதிய அனுமதிகள் இன்று முதல் (C-6280)

ஆரம்பம் : ஏப்ரல் - 07 சனி காலை 8.00 மணி

**Excavator விற்பனைக்கு**

HITACHI 80, IHI 30 ஆகிய இரு EXCAVATORS விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் பார்வையிடலாம்.

விபரங்களுக்கு:-

0777 266801 (8097)

**தேவை**

பாமசி மருந்தகம் ஒன்றிற்கு Pharmacist தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-

077 0452572 (8117)

**A/L 2014**

புதியதோர் உலகம் செய்வோம்

**DCM** யாழ் நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம் : ஏப்ரல் 07 சனி காலை 8 மணி

கலைப் பிரிவு

பொருளியல் : வரதராஜன்
தமிழ் : சந்திரலிங்கம்
புவியியல் : குமரன்
அரசியல் : சுகாஷ்
வரலாறு : ஆனந்தன்
இந்து நாகரிகம் : சிறீஸ்
அளவையியல் : நீதன்
நாடகமும் அரங். : றமேஸ்
கிறிஸ்தவம் : பிரபல ஆசிரியர்

வர்த்தகப் பிரிவு

பொருளியல் : வரதராஜன்
கணக்கீடு : பகீரதன்
வணிகக்கல்வி : முரளி (C-6262)

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான

திருமண அழைப்பிதழ்கள் மற்றும்

அனைத்துவிதமான அச்சுவேலைகளையும் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்

இவற்றுடன்....

கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...

**பாரதி பதிப்பகம்**

இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 222 3081

**தேவை**

யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவருக்கு திருநெல்வேலியை அண்மித்த பகுதிகளில் போதிய வசதிகளுடன் பாதுகாப்பான தங்குமிடம் தேவை.

தொடர்புகளுக்கு:-

078 3679510 (8058)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.